15.01.2025 - புதன்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 70 குரோதி வருடம் தை மாதம் 02 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 15 பக்கங்கள் - 12








வவுனியாவில் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் 2886வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொங்கல் நாளான நேற்று (14) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட போது. **(படங்கள் கி.வசந்தன்)**

● பீஜிங்கில் அநுரவுக்கு இராணுவ மரியாதையுடன் பெரு வரவேற்பு

# சீன-இலங்கை ஜனாதிபதிகள் இன்று உத்தியோகபூர்வ சந்திப்பு

## முதலீடுகள், அபிவிருத்தி திட்டங்கள் குறித்து பேச்சு

**(ஆர்.மனோசங்கர்)**

சீனா சென்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு சீன அரசால் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது. இந்தியாவுக்குப் பயணம் செய்திருந்தபோது வழங்கப்பட்ட வரவேற்பைவிடவும் சீனாவில் அதிக வரவேற்பு வழங்கப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் அரச மற்றும் தனியார் முதலீடுகள் அத்துடன் இலங்கையில் சீனா மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க

02 →



## இந்தியாவின் பொருளாதார வலிமைக்கு உலக அங்கீகாரம்



**சுப்ரமணியம் நிஷாந்தன்**

புதிய இந்தியாவின் தலைமைத்துவம் மற்றும் பொருளாதார வலிமைக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டிற்கு மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் சென்றுள்ளார். அந்நாட்டுக்கு அமைச்சராக

02 →

## பட்டதாரி அல்லாத ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு

**(ஏ.எச்.ஏ.ஹுஸைன்,முகம்மட் முக்தார்)**

பாடசாலைகளில் பணியாற்றிவரும் பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.




பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக தகுதி பெற விரும்பும், அரச பாடசாலைகளின் பட்டதாரிகள் அல்லாத சகல ஆசிரியர்களும் இவ்வருடம் மே மாதம் நடைபெறும் அரச ஆசிரியர் கல்லூரி இறுதித் தேர்வு - 2025 பரீட்சையை எழுதுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பரீட்சை எழுத விரும்பும் அரச பாடசாலை ஆசிரியர்கள் ஜனவரி 9 முதல் 24 வரை இணையத்தளம்வழியாகவிண்ணப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் சுற்றறிக்கை ஒன்றின் ஊடாக அறிவுறுத்தியுள்ளது.

மேலும், பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களையும்

02 →



தைப் பொங்கலை முன்னிட்டு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் ஆலய பிரதம குரு தலைமையில் விசேட அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன

## திருமலையில் தமிழரசின் மத்திய குழுக் கூட்டம்

**(கி.வசந்தன்)**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் காலை பத்து மணிக்கு கூட்டம் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள

02 →

## மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதல்வருடன் விரைவில் பேச்சு



இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளதாக தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், அதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்படுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் நிகழ்வின் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக

02 →

## இஸ்ரோவின் புதிய தலைவராக நாராயணன் பொறுப்பேற்பு



**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவின் (Indian Space Research Organization, ISRO,) தலைவராக வி. நாராயணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து பணி ஓய்வு பெறும் இஸ்ரோ

02 →

## கடவுச்சீட்டுகளை துரிதமாக வழங்க நடவடிக்கை



குடிவரவு, குடியகல்வு திணைக்களம் நாளொன்றுக்கு 2,500 கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இதற்கு முன்னர் நாளொன்றுக்கு 1,200 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். கடவுச்சீட்டை பெறுவதற்கு பெருமளவான மக்கள் சுமார் 03 மாதங்கள் காத்திருப்பதாக அமைச்சரிடம் முறையிடப்பட்டது.

இந்நிலையில் அவசரமாக வெளிநாடு செல்ல வேண்டியிருந்தால், கடவுச்சீட்டை பெறுவதற்கு தனியான பிரிவொன்று திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

02 →

## கிணற்றில் தவறி வீழ்ந்து பாலகி மரணம்



**(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)**

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மக்காமடி குறுக்கு வீதியில் உள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் தவறுதலாக வீழ்ந்து இரண்டு வயதுடைய பெண் குழந்தை மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திங்களன்று (13) மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் முஹம்மது சாஜித் மெஹ்றிஸ் அய்ரா எனும் குழந்தையே மரணமடைந்துள்ளது.

குழந்தை வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த தருணம் கிணற்றுக்கு அருகில் இருந்த கதிரையில் ஏறி கிணற்றினுள் தவறி வீழ்ந்துள்ளது.

02 →

## வரி அதிகரிப்பால் சிகரெட் உற்பத்தி நிறுவனங்களுக்கே அதிக இலாபம்

**(ஆர்.மனோசங்கர்)**

மதுபானம் மற்றும் சிகரெட்டுகள் சாதாரண நுகர்வோர் பொருட்கள் அல்ல எனவும் அவற்றின் விலைகள் எப்போதும் அந்தப் பொருட்களை வாங்குவதை ஊக்கப்படுத்தாத அளவில் பராமரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

"இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும்

02 →



தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, கொழும்பு, பம்பலப்பிட்டி வஜிர பிள்ளையார் ஆலயத்தில் நேற்று (14) இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கலந்துகொண்டார். ஐக்கிய மக்கள் சக்தியையும், ஐக்கிய மக்கள் கூட்டணியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 107 ஆவது கவியரங்கம்



(ஐ. ஏ. காதிர் கான்)

பௌர்ணமி தின கவியரங்கு வரிசையில், "வலம்புரி கவிதா வட்டம்" தனது 107 ஆவது கவியரங்கினை புத்தாண்டின் முதலாவது கவியரங்கை (13) திங்கட்கிழமை நடத்தியது.

மினுவாங்கொடை - கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய ஆசிரியர் கவிஞர் மினுவாங்கொடை ஏ. சிவகுமார், கவியரங்கினை தலைமையேற்று நடாத்தினார்.

வகவ ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர்கனி முன்னிலை வகித்தார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்வினை நெறிப்படுத்தி தலைமையுரையும் வரவேற்புரையும் நிகழ்த்தினார். பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார்.

அண்மையில் எம்மை விட்டும் பிரிந்த பேராதனை ஏ.ஏ. ஜுனைதீன், ஹம்ஸா ஹனீபா, ரிஸ்கி ஷரீப், அந்தனி ஜீவா ஆகியோர்களுக்கான மௌனப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற வாசுகி வாசு, குறும்படம் தந்த கலைஞர் அமல் பாண்டி ஆகியோரும் பாராட்டப்பட்டனர். கவிஞர் மினுவாங்கொடை ஏ. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், கவிஞர்கள் என்.பி.எம். தஸ்லீம், எஸ். தனபாலன், ஹமீத் அல் ஹுசைனி மாணவர் அப்துல்லாஹ் சியாமீர், கலேவெல ராஜன் நஸீர்தீன், தி. ஸ்ரீதரன், பாணந்துறை பாத்திமா ரிஹ்லா, சட்டத்தரணி தவச்செல்வன், மலாய்கவி டிவாங்ஸோ ராஜா நித்திலன், ஆர். தங்கமணி,

சிந்தனைப் பிரியன் முஸம்மில், எம்பிஎஸ் பாலா, நமடகஹவத்த கலேவெல நபீல் இப்னு இஸ்மாயில், வெளிமடை ஜஹாங்கீர், தாமரைச் செல்வி, பவானி சச்சிதானந்தன், வாசுகி வாசு, பரீஹா பாஷரூக் ஆகியோர் கவி மழை பொழிந்தனர்.

காரைக்கவி பத்மநாதன், எஸ். ஜெகதீசன், எம்.பீ.எம். சித்தீக், ஆர். சந்திரசேகரன், கல்லொளுவை பாரீஸ், எஸ்.எச்.என். நுஸ்ரியா, அமல் பாண்டி, வி. பவித்திரன், ஹரிபிரியன் தேவ் போன்றோர் சபையை மலர்களால் அலங்கரித்தனர்

# நீதி அமைச்சரின் கலாநிதி பட்டம்

# நாடாளுமன்ற ஊழியர்கள் சிலர் சிஐடிக்கு அழைப்பு

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம் வழங்கி, நாடாளுமன்ற இணையத் தளத்தில் பதிவிட்ட விடயம் தொடர்பில் நாடாளுமன்ற ஊழியர்கள் சிலர் இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

முக்கியமாக நாடாளுமன்ற பதிவு அலுவலகத்தின் உயர் அதிகாரி உட்பட பலர் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற இணையத் தளத்தில் பதிவிட்ட விடயம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக , நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் உட்பட பலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளும் நாடாளுமன்றத்திற்குச் சென்று அதிகாரிகள் சிலரிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்திருந்தனர்.




எனினும், சபை முதல்வர் காரியாலயத்தில் இருந்து வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதி பட்டம் பதிவிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரதமர் அலுவலகத்தில் தைப் பொங்கல்

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் தைப் பொங்கல் கொண்டாட்ட நிகழ்வு செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.

பொங்கல் பொங்குதல் உள்ளிட்ட பாரம்பரிய சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தைப் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இங்கு பிரதமர் அலுவலக அதிகாரிகளால் பல நடன மற்றும் பாடல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் மீன்வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் பிரதமர் அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### இந்தியாவின் பொருளாதார...

ஜெய்சங்கர் செல்வது இதுவே முதன்முறை. அங்கு சென்ற அவர் ஸ்பெயின் வெளியுறவு துறை அமைச்சர் ஜோஸ் மானுவேல் அல்பாரெஸை சந்தித்துபேசினார். அதை தொடர்ந்து இந்திய வம்சாவளியினர் கலந்து கொண்ட கூட்டத்திலும் பங்கேற்று உரையாற்றினார்.

இந்திய வம்சாவளியினர் கூட்டத்தில் ஜெய்சங்கர் உரையாற்றுகையில்:

இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய அந்தஸ்து அனைவராலும் பாராட்டப்படுகிறது. இந்தியா– ஸ்பெயின் உறவுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளன. ஸ்பெயினின் உலகளாவிய தூதர்களிடம் உரையாற்ற ஒரு வெளிநாட்டு அரசு பிரதிநிதி அழைக்கப்பட்டது இதுவே முதல் முறை. தங்கள் நாட்டின் தூதர்கள் மத்தியில் உரையாற்றும்படி ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சகம் அழைக்கும் போது, அது ஏன் என்று சிந்திக்க வேண்டியது அவசியம்.

இந்தியாவின் இன்றைய நிலைப்பாடு மிகவும் முக்கியமானது. இன்றைய உலகின் நிலைமையைப் பார்க்கும்போது, அனைத்து நாடுகளும் இந்தியாவுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருப்பது தான் தங்கள் நலன் என்று நினைக்கின்றன.

நமது புதிய இந்தியா, அதன் பொருளாதார வலிமை மற்றும் தலைமைத்துவம் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்று, நாம் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இருக்கிறோம், மூன்றாவது பெரிய நாடாவதற்குத் தயாராக இருக்கிறோம்.

நமது நிலைப்பாடு, திறன்கள் மற்றும் யோசனைகள் காரணமாக உலகம் நம்மை அறிந்திருக்கிறது. இந்தியா இன்று உலகளாவிய உரையாடல்களுக்கு பங்களிப்பதாக பார்க்கப்படுகிறது.ரஷ்யா மற்றும் உக்ரைனுடன் பேசக்கூடிய நிலையில் மிகக் குறைவான நாடுகள் மட்டுமே உள்ளன. அதுபோல் இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுடனும் உறவு உள்ளது. குவாட் மற்றும் பிரிக்ஸ் உறுப்பினர்களாகவும் இந்தியா உள்ளது.பிரதமர் மோடியால் இரண்டையும் செய்ய முடிகிறது என ஜெய்சங்கர் தெரிவித்தார்

### சீன-இலங்கை...

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் மற்றும் சீன உயர் அதிகாரிகளுடன்பேச்சு நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தங்களும் கைச்சாத்திட சீன, இந்திய அரசுகள் ஏட்டிக்கு போட்டியாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டதன் பின்னாலுள்ள புவிசார் அரசியல் காரணிகள் தொடர்பாகவும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சீனா சென்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சீன பிரதி வெளியுறவு அமைச்சர் சென் சியாடொன் வரவேற்றதோடு சீன இராணுவத்தின் முழு இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பயணித்த பாதையின் இருமருங்கும் இரு நாடுகளின் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, தொழில்நுட்பம் மற்றும் விவசாய மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல களப் பயணங்களிலும் பல உயர் மட்ட வணிகக் கூட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்க உள்ளார்.இந்தப் விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளன.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீன தூதுவர் சீ ஜென்ஹொன்ங், சீனாவுக்கான இலங்கை தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றனர்.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் (Xi Jinping) அழைப்பின் பேரில் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நேற்று சீன நேரப்படி முற்பகல் 10.25க்கு சீனாவின் பீஜிங் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

இன்று சீன ஜனாதிபதியுடன் சந்திப்பு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இன்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை சந்திக்கிறார்.

இந்தச் சந்திப்பு இன்று மக்கள் மண்டபத்தில் இடம் பெற உள்ளது. இலங்கை ஜனாதிபதிக்கும் சீன ஜனாதிபதிக்கும் இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் பின்னர் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

### பட்டதாரி அல்லாத...

விண்ணப்பப் படிவத்தையும் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளமான doenets.lk அல்லது onlineexams.govt.lk/eic இல் பெறலாம்.

இதன்படி, விண்ணப்பங்களை இந்த இணையத்தளங்கள் வாயிலாக பரீட்சைத் திணைக்களத்துக்கு உரிய திகதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் விசேட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மீனவர்கள் பிரச்சினை...

முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன். வெகு விரைவில் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான சந்திப்பு நடைபெறும்.

தமிழக அரசின் அழைப்பின் அயலகத் தமிழர் தின நிகழ்வில் கலந்து கொண்ட போதே தமிழக முதலமைச்சரிடம் இக்கோரிக்கையை விடுத்திருந்தேன் .அதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நாடத்தப்படும் என தெரிவித்தார்.

### கிணற்றில் தவறி...

குழந்தை தவறியிருப்பதை அறிந்து குழந்தை கிணற்றுக்குள் வீழ்ந்திருக்கலாம் என்ற ஊகத்தில் அயலவர்களின் உதவியுடன் தேடியபோது உயிரிழந்த நிலையில் குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம், ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரண விசாரணைகள் நிறைவடைந்து, அடக்கம் செய்வதற்காக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

### வரி அதிகரிப்பால்...

சுமார் 15,000 பேர் மது அருந்துவதால் மரணமடைகிறார்கள். புகைப்பிடிப்பதனால் ஆண்டுக்கு சுமார் 20,000 பேர் உயிரிழக்கின்றனர். ஏராளமான மக்கள் நோய்வாய்ப்படுகிறார்கள், மேலும் மது மற்றும் புகைப்பழக்கம் மக்களின் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளாக மாறிவிட்டன.

இந்நிலையில், நாட்டில் உள்ள பல்வேறு தரப்பினர்களையும் ஈர்க்கும் நோக்கில் புகைப்பொருட்கள் மற்றும் மதுபான நிறுவனங்கள் பல்வேறு உத்திகளைச் செயல்படுத்துகின்றன.

நாட்டில் தொற்றா நோய்களால் ஏற்படும் இறப்புகளின் எண்ணிக்கை தற்போது 80 வீதமாக அதிகரித்துள்ளது. தொற்றாத நோய்களுக்கான நான்கு முக்கிய ஆபத்து காரணிகளில் புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் ஆகும்.

அமெரிக்க மத்திய அரசின் பொது சுகாதார சேவைகளின் தலைவர் (சர்ஜன் ஜெனரல்) இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு சிறப்பு அறிக்கையை வெளியிட்டிருந்தார்.அதில் மது ஒரு புற்றுநோயை உண்டாக்கும் காரணி என்றும், சிறிய அளவிலான மது அருந்துதல் கூட ஒரு நபரின் புற்றுநோய் அபாயத்தை அதிகரிக்கிறது என்றும் கூறினார்.மதுசாரம் ஒரு புற்றுநோயை உண்டாக்கும் காரணியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வரி அதிகரிப்பால் சிகரெட் உற்பத்தித் துறை பெறும் இலாபம் தோராயமாக 7,000 மில்லியன் ரூபாய்க்கு மேல் என்று மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வெளிப்படுத்தியுள்ளது.

மக்கள் சார்பு அரசாங்கங்கள் செய்ய வேண்டியது புகையிலை மற்றும் மதுபான நிறுவனங்களின் வருவாயை அதிகரிப்பது அல்ல.மாறாக பொதுமக்களை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் ஆரோக்கியமான, பொருளாதார முடிவுகளை எடுப்பதுதான் என்பதை மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், முறையான கலால் கொள்கையை அமல்படுத்துவதன் மூலம் மக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இஸ்ரோவின் புதிய...

தலைவர் சோம்நாத், புதிய தலைவராக நியமிக்கப்பட்ட நாராயணனிடம், தனது பொறுப்புகளை ஒப்படைத்து விடைபெற்றார்.

இஸ்ரோவின் தலைவராக இருந்த சோம்நாத் பதவி காலம் நிறைவடைந்தது. இதையடுத்து புதிய தலைவராக வி. நாராயணனை மத்திய அரசின் நியமனக்குழு தெரிவு செய்தது. தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மேலட்டுவிளை என்ற கிராமத்தை சேர்ந்தவர் நாராயணன். இவர் ஏழை குடும்பத்தில் பிறந்த இவர் தமிழ் மொழியில் படித்து உயர்ந்த நிலையை அடைந்துள்ளதை பல்வேறு தரப்பினர் பாராட்டி வருகின்றனர்.

இந்நிலையில் பணி ஓய்வு பெறும் இஸ்ரோ தலைவர் சோம்நாத், புதிய தலைவராக நியமிக்கப்பட்ட நாராயணனிடம், 13ம் திகதி தனது பொறுப்புகளை ஒப்படைத்து விடைபெற்றார். பணி ஓய்வு பெற்ற சோம்நாத்துக்கு, இஸ்ரோ அலுவலர்கள் அனைவரும் பிரியா விடை கொடுத்தனர்.

நாராயணன் தலைவராக பொறுப்பேற்றதன் மூலம் இஸ்ரோவில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. இவர், இஸ்ரோ தலைவர் பதவியுடன், மத்திய அரசின் விண்வெளித்துறை செயலாளராகவும் பதவி வகிப்பார். 2 ஆண்டுகள் வரையில் அவர் இந்த பதவிகளில் இருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஜி.எஸ்.எல்.வி., எம்.கே-3 , கிரயோஜெனிக் இன்ஜின் உள்ளிட்ட திட்டங்களுக்கு முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (Indian Space Research Organization, ISRO) இந்திய அரசின் முதன்மையான தேசிய விண்வெளி முகமை ஆகும். பெங்களூரில் தலைமைப் பணியகம் கொண்ட இஸ்ரோ 1969 இல் உருவாக்கப்பட்டது

### கடவுச்சீட்டுகளை...

அந்த கவுண்டரில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை சிறப்பு குழுவொன்று பரிசீலனை செய்து விரைவில் கடவுச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்

### திருமலையில் ...

ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய பார்வை, மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதோடு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்து வரும் புதிய அரசியலமைப்பு விடயத்தினை தமிழ்க் கட்சிகள் கூட்டாக கையாளுதல் விடயத்தில் தமிழரசுக்கட்சியின் வகிபாகம் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படலாம் என்று அக்கட்சியின் நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இலங்கை அமைச்சர்கள் சந்திப்பு!




இலங்கை கடற்தொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்புத் துறை பிரதிய மைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் சனிக்கிழமையன்று சென்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்தில் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டனர்.

கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், பொன்னாடை அணிவித்து இலங்கை அமைச்சர்களை வரவேற்றார். அமைச்சர்கள் இருவரும் மலையக பகுதியை சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர்களுடன் நடைபெற்ற உரையாடலில் மத்தியக்குழு உறுப்பினர் உ.வாசுகி, மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.கனகராஜ், எஸ்.கண்ணன், மாநிலக்குழு உறுப்பினர் இரா. சிந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் புதிதாக அமைந்துள்ள இலங்கை அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்து தெரிவித்ததோடு, தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் போது முன்னெழுகிற பிரச்சினைகள் குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தோட்ட தொழிலாளர்களின் வாழ்விட, வாழ்வாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது முன்வைக்கப்பட்டது. தமிழ்நாட்டு முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களுக்கு கடவுச்சீட்டு வழங்க வேண்டும். குறிப்பாக, கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி சபை தேர் தல்கள் நடத்துவது பற்றியும், தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது பற்றியும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது.

இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழர் ,இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளில் உறுதியாக கவனம் செலுத்தும், மக்கள் தங்கள் மீது அதன் காரணமாகவே நம்பிக்கை வைத்துள்ளனர் என்று அமைச்சர்கள் தெரிவித்தனர். பரஸ்பர உறவு தொடர வேண்டும் என்ற கருத்து இருத்தரப்பிலும் பிரதிபலித்தமை குறிப்பிடத்தக்கது.



சீனா சென்றடைந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு அங்கு இராணுவ மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

## டிஜிட்டல் அடையாள அட்டை வழங்க விரைவில் நடவடிக்கை

டிஜிட்டல் அடையாள அட்டையை இந்த மாதம் முதல் வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார். ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், புதிதாக வழங்கப்படும் அனைத்து அடையாள அட்டைகளும் டிஜிட்டல் மயமாக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அடையாள அட்டைகளைப் பெறுவதில் ஏற்கனவே குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டுள்ளதால், அதனை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற் கொள்ளப்படும் என்றார். டிஜிட்டல் அடையாள அட்டை முறையை உருவாக்குவதற்கு சுமார் 20 பில்லியன் ரூபா செலவாகும் என்பதால், அதில் பாதியை இந்தியாவின் உதவி மூலம் பெற எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

## நிந்தவூர் அட்டப்பள்ளம் ஆற்றில் மோட்டார் சைக்கிளுடன் தவறி விழுந்து ஒருவர் பலி

### சுழியோடிகளால் சடலம் மீட்பு

(முகம்மட் முக்தார்)

மோட்டார் சைக்கிளில் ஆற்றுக்கு குறுக்காக உள்ள துரிசியைக் கடக்க முற்பட்ட போது மோட்டார் சைக்கிள் நீரில் வீழ்ந்தமையால் அடித்து செல்லப்பட்டு நீரில் மூழ்கிய ஒருவர் நீண்ட தேடுதலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டப்பள்ளம் பகுதியில் உள்ளாத்து கட்டு அருகில் உள்ள ஆலயடிக்கட்டு பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (13) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தவறி விழுந்து நீரில் அடித்து செல்லப்பட்டவர் தனது மோட்டார் சைக்கிளில் மனைவி பிள்ளையுடன் குறித்த பகுதிக்கு வருகை தந்து பின்னர் தான் மட்டுமே தனியாக மோட்டார் சைக்கிளில் முன்செல்ல பின்னால் அவரது மனைவி, பிள்ளை ஆகியோர் ஆற்றுக்கு குறுக்காக உள்ள துரிசுடன் இணைந்த பாலத்தில் பயணம் செய்துள்ளனர்.

இதன்போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதுடன் தனியாக முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்ற 32 வயது அப்துல் லத்தீப் இக்ராம் என்பவர் ஆற்றினுள் தவறி விழுந்து நீரில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

இவர் வெளிநாட்டில் தொழில் புரிந்து வந்த நிலையில் சில நாட்களுக்கு முன் விடுமுறை நிமித்தம் நாடு திரும்பி இருந்தார். இந்த நிலையில் இவர் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத் துள்ளார்.

பின்னர் நீரில் காணாமல் போனவரை தேடுவதற்கு அப்பகுதியில் நீரோட்டத்தை குறைக்கும் முகமாக தற்கா லிகமாக துரிச கதவுகள் சில உரிய தரப்பினரின் அறிவுறுத் தலுக்கமைய நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளினால் மூடப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த தேடுதலில் நிந்தவூர் பொலிஸாரின் முன்பாக கல்முனை ஆழ்கடல் சுழியோடி அணி, சாய்ந்தமருது ஜனாஸ ா பேரவை அணி, நிந்தவூர் தன்னார்வ தொண்டர் அணி என்பன கடும் முயற்சி மேற்கொண்டு சடலத்தை மீட்டெடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த சம்மாந்துறை நீதிமன்ற பதில் நீதிவான் சடலத்தை பார்வையிட்டு மரண விசாரணை மேற் கொண்ட பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

இதன் பின்னர் சடலம் அன் றைய தினம் இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.

தற்போது அம்பாறை மாவட் டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக ஆறுகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளதுடன் வெள்ள நிலைமையும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 2ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** யதார்த்தமாக யோசிக்க வேண்டியது அவசியம்.

**ரிஷபம்** உறுதியுடன் இருந்தால் நற்பலன்களைக் காணலாம்.

**மிதுனம்** கடின முயற்சி மூலம் இன்றைய நாளை சாதகமாக்க முயலுங்கள்.

**கடகம்** புதிய நண்பர்களின் தொடர்பு கிடைக்கும்.

**சிம்மம்** பாதுகாப்பற்ற உணர்வு அல்லது பதட்டத்தை தவிர்த்துவிடுங்கள்.

**கன்னி** உங்களின் ஆற்றலை நீங்கள் உணரும் நாள்.

**துலாம்** உற்சாகமான வாய்ப்புகள் உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

**விருச்சிகம்** உங்கள் உணர்சிகளை கட்டுபடுத்த வேண்டும்.

**தனுசு** இன்று மனதில் ஏற்படும் சலனங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

**மகரம்** தகவல் பரிமாற்றத் திறமையால் வெற்றி காண்பீர்கள்.

**கும்பம்** முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு சிறந்த நாள்.

**மீனம்** நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றி தாமதமாகும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** பின்னிரவு 4.44

**நட்சத்திரம்:** பூசம் மு.ப 11.53 வரை.

**யோகம்:** சித்தம்.

**சந்திராஷ்டமம்:** மூலம், பூராடம்

**சூலம்:** வடக்கு.

**இராகு காலம்:** 12.00 AM முதல் 01:30 PM வரை.

**குளிகை:** 10:30 AM முதல் 12:02 PM வரை.

**எமகண்டம்:** 7:30 முதல் 09:00 வரை.

## உணவுப் பொதியில் கரப்பான் பூச்சி



இலங்கை துறைமுக அதிகாரசபையால் நடத்தப்படும் கொழும்பு துறைமுக சமையலறையில் சமைக்கப்பட்ட மாங்காய் கறியில் இறந்த பெரிய கரப்பான் பூச்சி இருந்ததாகத் துறைமுக ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கிழக்கு கொள்கலன் முனையத்தில் பணிபுரியும் ஒரு ஊழியர் கடந்த 12ஆம் திகதி இரவு சமையலறையிலிருந்து பெற்ற உணவுப் பொதியில் இந்த இறந்த கரப்பான் பூச்சி இருந்ததாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

தெற்காசியாவின் மிகப்பெரிய சமையலறை என்று அழைக்கப்படு கொழும்பு துறைமுக சமையலறையில் உணவின் தரம் மற்றும் அதன் நிர்வாகத்தில் தற்போது பெரும் சிக்கல் இருப்பதாகவும், சில நாட்களுக்கு முன்பு கத்தியின் உடைப்பட்ட சிறு பாகம் உணவிலிருந்து கண்டுபிடித்ததாகவும் ஊழியர்கள் கூறுகின்றனர்.

மருத்துவர்களை உள்ளடக்கிய ஒரு குழு சுகாதாரம், பாதுகாப்பான சமையல் மற்றும் உணவு வகைகளைத் தயாரிப்பதை உறுதி செய்தாலும், சமீபத்தில் சில தொழிற்சங்கங்களின் செல்வாக்கால் அதிகாரிகளும் ஊழியர்களும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், அழுத்தம் காரணமாக உணவுப் பாதுகாப்பு கேள்விக்குள் ளாகியுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து, துறைமுக அதிகார சபையின் தலைவர் அட்மிரல் எஸ். எஸ். ரணசிங்கவிடம் விசாரித்தபோது, உணவில் கரப்பான் பூச்சி இருப்பதாக இதுவரை முறைப்பாடு வரவில்லை என்றும், சமையலறையைத் தனியார் மயமாக்குவதை நிறுத்தியதன் மூலம் துறைமுக சமையலறையைக் காப்பாற்றியதாகவும் கூறினார்.



கண்டியில் மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள் கம்பளை நிருபர்)

## தொலைபேசி டேட்டா பொதிகளின் விலை அதிகரிக்கப்படவில்லை

(ஆர்.மனோசங்கர்)

கையடக்க தொலைபேசிகளுக்கான டேட்டா பொதிகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் முற்றிலும் தவறானவை என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பணிப்பாளர் இந்திரஜித் ஹந்தபான்கொட இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு தொலைபேசி பொதியின் விலையையும் அதிகரிக்க எந்தவொரு நிறுவனத்திற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வாறான செய்தி உண்மைக்குப் புறம்பானதாகும். எந்தவொரு விலை அதிகரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை என சகல தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்களும் எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடிக்கையாளர் ஒருவர் தான் செயல்படுத்திய தொலைபேசி பொதியின் விலையில் அதிகரிப்பை எதிர்கொண்டால், அது தொடர்பான ஆதாரங்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

## ஜனவரி மாத இறுதியில் விவசாயிகளுக்கு இழப்பீடு

சீரற்ற காலநிலை நிலவிய கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடு ஜனவரி மாத இறுதியில் வழங்கப்படும் என கமத்தொழில் மற்றும் கமநலக் காப்பீட்டு சபை தெரிவித்துள்ளது. பயிர் சேத மதிப்பீடுகளில் சுமார் 95 சதவீதம் தற்போது நிறைவடைந்துள்ளதாக அதன் தலைவர் பேமசிறி ஜயசிங்கராச்சி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பகுதிகளில் பயிர் சேத மதிப்பீடுகள் தற்போது இறுதி கட்டத்தில் உள்ளன.விவசாயிகள் அபிவிருத்தி மத்திய நிலையங்களினால் பரிந்துரைக்கப்பட்ட இறுதி இழப்பீட்டு ஆவணங்கள் பெறப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என்று தலைவர் மேலும் தெரிவித்தார்.

## இரணைமடுவில் யானை உயிரிழப்பு



கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கரைப் பகுதியில் 15 நாட்களாக காயத்துடன் காணப்பட்ட யானை உயிரிழந்துள்ளது.

குறித்த யானை காயத்துடன் அவதிப்படுவதாக தாம் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தெரிவித்தும் அவர்கள் வருகை தந்தபோதும் உரிய சிகிச்சை வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது இறந்த யானையின் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக மீனவர்கள் அறிவித்ததையடுத்து சடலத்தை கிளிநொச்சி மாவட்ட வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் பார்வையிட்டு மீட்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவிக்கின்றனர்.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# புது டில்லி - கொழும்பு உறவும் ஈழத்தமிழர் பொறுப்பும்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவுக்குச் சென்றுள்ள நிலையில் இந்திய மத்திய அரசு இலங்கையுடனான உறவில் மேலும் பல புதிய விடயங்களை உள்ளடக்க வேண்டிய அவசியங்கள் குறித்து தற்போது பேசப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமர் நரேந்திர மோடியுடன் கடந்த ஆண்டு செய்துகொண்ட தொலைநோக்குப் பிரகடனம் இங்கே முக்கியமாகப் பேசப்படுகிறது. இப் பிரகடனம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார மற்றும் மத உறவுகள், இரு நாடுகளும் ஜனநாயக நாடுகளாக இருப்பது, இரு நாடுகளுக்கும் பிரிட்டிஷ் சட்டக் கட்டமைப்பு இருப்பது போன்ற விடயங்கள் குறித்து இந்திய - இலங்கை அரசுகள் பேசவுள்ளன. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகள் தொடர்பாகவும் உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் ஜேவிபியின் முகத் தோற்றமான தேசிய மக்கள் சக்தி இந்திய எதிர்ப்புவாதத்தை முன்னைப் போன்று அதாவது, ஜேவிபியாக இருந்தபோது வெளிப்படுத்திய இந்திய எதிர்ப்பை தற்போது காண்பிக்க முடியாத சூழல் உருவாகும். ஆனாலும், உள்ளார்ந்த ரீதியில் குறிப்பாக மனதளவில் அந்த எதிர்ப்பு இருக்கும் என்பது கண்கூடு. இது புரிந்த நிலையில்தான் இந்தியா மாற்றுத் தன்மை கொண்ட அணுகுமுறைகளை பின்பற்ற ஆரம்பித்துள்ளது போலும்.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை ஒரு சிறிய நாடு. ஆனாலும், சீனாவுடன் கொண்டுள்ள உறவு இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் இராணுவ ரீதியான செயல்முறைகளில் சீனாவுக்கு இலங்கை இடமளிக்கக்கூடாது என்ற அடிப்படைப் பிடிவாதம் இந்தியாவிடம் உண்டு. இதன் காரண-காரியமாகவே அநுரகுமாரவின் ஆட்சிக் காலத்தில் நிறுவவுள்ள உறவு முறையை மிகவும் ஆழமாகப் பதிக்க புதுடில்லி முற்படுகிறது போல் தெரிகிறது.

ஜேஆர் காலத்தில் இருந்து இன்றைய அநுர வரையும் இந்தியா தொடர்பான இலங்கையின் போக்கு புதுடில்லிக்குத் புரியாததல்ல. அதேநேரம் முப்பது வருட ஆயுதப் போராட்ட காலத்தின்போதும், நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற காலத்தின்போதும் புதுடில்லி 1987 ஆம் ஆண்டு செய்யப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவான 13 ஆவது திருத்தச்சட்டத்தை திணிக்க முற்பட்டது. அதன் காரண-காரிய உள்நோக்கு மன அடிப்படையில் நோர்வேயின் சமாதானத் தூதுவர்களை அழைத்து புதுடில்லி பேசியுமிருந்தது. இது அப்போது வன்னிக்கும் தெரிந்திருந்தது. ஆனால், 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலேதான் இந்தியாவின் உள்மனம் பகிரங்கமாக வெளிப்பட்டது. அதாவது, 13 ஆவது திருத்தச் சட்டமே தீர்வு என்பதும் புதுடில்லியை மையப்படுத்திய இந்தியத் தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படைக் கோட்பாட்டின் விருப்பமும் அதுவே என்பதும் பொது வெளிச்சத்துக்கு வந்தது. ஆனால், தற்போது அநுரவின் ஆட்சியில் டில்லிக்குப் பல மயக்கமான புரிதல்களோடு அதாவது, ஏன் ஈழப் போரை இல்லாதொழித்தோம் என்ற வெளிப்படுத்த முடியாத வேதனையோடு இலங்கையுடனான உறவை புதுப்பிக்க வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்பட்டிருக்கிறது. அந்த வியூகங்களிலும்கூட ஈழத் தமிழர்களின் எண்பது வருடங்களுக்கும் மேற்பட்ட அரசியல் விடுதலைக்கான உரிய தீர்வு அல்லது ஈழத்தமிழ்த் தரப்புடன் பேச வேண்டும் அல்லது அவர்களை அழைத்து உறுதியான தீர்வின் அவசியம் பற்றியும் சிங்கள ஆட்சியாளர்களுடன் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளவுள்ள உறவு முறைகள் பற்றியும் திறந்த உரையாடலை நடத்த வேண்டும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. அதற்கேற்ப ஈழத் தமிழ்த்தரப்பிடமும் தங்களைத் தயார்ப்படுத்தியுள்ளதாக அல்லது ஒருமித்த குரலில் பேசக்கூடிய பொறிமுறைக் கட்டமைப்பை உருவாக்கும் திட்டம் இருப்பதாகவும் கூற முடியாது.

இப்பின்னணியில் பெரிய நாடான இந்தியா தான் எடுக்கும் முடிவையே ஈழத்தமிழர்கள் ஏற்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். ஏற்கனவே அவ்வாறான எண்ணப்பாங்குடனேயே புதுடில்லி செயற்பட்டும் வருகின்றது. ஆகவே, இலங்கையுடன் குறிப்பாக சிங்களத் தலைவர்களைக் கையாள இந்தியா மேற்கொள்ளவுள்ள புதிய உறவுமுறை எப்படிப்பட்டதாகவும் இருக்கலாம். ஆனால், தமிழ்த்தரப்பும் அதற்கு முன்னர் முந்திக்கொள்ளக்கூடிய உத்திகளை வகுக்க வேண்டும். புவிசார் அரசியல் சூழலுக்கு ஏற்ப சிங்கள தலைவர்கள் குறிப்பாக அநுரகுமார அணுக முற்படுவது போன்று ஈழத் தமிழர் தரப்பும் தமது வகிபாகம் என்ன என்ற விவகாரத்தில் கூட்டுச் சிந்தனையோடு இயங்க வேண்டிய காலமிது.

ரணில் - மோடி கடந்த வருடம் செய்து கொண்ட தொலைநோக்குப் பிரகடனத்தின் பிரகாரம் மொஹஞ்சேதாரோ நாகரிக காலத்திலிருந்தே இந்தியாவில் இருந்து கப்பல்கள் இலங்கைக்கு வந்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக தென்னிந்தியா மற்றும் இலங்கையில், அநுராதபுரம், தஞ்சாவூர், மதுரை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு இராச்சியங்களும் தங்கள் பொருளாதார நலன்களைப் பொறுத்து ஒருவருக்கொருவர் கூட்டணி வைத்தன அல்லது ஒருவருக்கொருவர் சண்டையிட்டன என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த மூன்று இந்திய இராச்சியங்களும் உலகின் கிழக்கு நாடுகளை அணுகுவதற்கு பல சந்தர்ப்பங்களில் திருகோணமலை துறைமுகம் ஒரு முக்கிய துறைமுகமாக மாறியது. முன்னேஸ்வரம் கோயில், மாந்தையிலுள்ள கேதீஸ்வரம் கோயில், நகுலேஸ்வரம் கோயில், திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரம் கோயில் உள்ளிட்ட அனைத்து ஆலயங்களிலும் கிடைத்த நாணயங்கள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவுகளையும் இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் பற்றியும் தெளிவுபடுத்துகிறது. இதனடிப்படையில் புதுப்பிக்கப்படவுள்ள உறவுமுறைகள் குறித்து தமிழ்த்தரப்பு கவனம் செலுத்த வேண்டும். வரலாற்றுத் திரிபுபடுத்தல்கள் இலங்கை அரசினால் கன கச்சிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த பின்னணியில் ஈழத்தமிழ்த் தரப்புக்கு பொறுப்புகள் அதிகரித்துள்ளன.

# உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் மாட்டுப் பொங்கல்

(க. மகாதேவன்)

தைத்திருநாளில் இரண்டாம் நாள் புதன்கிழமை(15) உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் விதமாக மாட்டுப் பொங்கல் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

உழவுத் தொழிலுக்கு உதவிய மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக தை இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இந்நாளன்று மாடுகள் குளிப்பாட்டப்பட்டு சந்தனம், குங்குமம் இட்டு மாலைகள் மற்றும் சலங்கைகள் கொண்டு அலங்கரிக்கப்படுகின்றன. சர்க்கரை மற்றும் வெண் பொங்கல் செய்யப்பட்டு அவற்றுடன் செங்கரும்பு, பழவகைகள் ஆகியவை மாடுகளுக்கு படையலிடப்பட்டு வழிபாடு நடத்தி, பின் வழிபாட்டுப் பொருட்கள் மாடுகளுக்கு உணவாக வழங்கப்படுகின்றன. அன்றைய தினம் ஜல்லிக்கட்டு, உறி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. மேலும் உழவர் நண்பர்களாக விளங்கும் மாடுகளை குளிப்பாட்டி, சந்தனம், குங்குமம் வைத்து, மலர் மாலை அணிவித்து, மாட்டின் கொம்புகளுக்கு வர்ணம் பூசி அலங்கரித்து விவசாயிகள் அதனை கடவுளாக வழிபடுவர்.

> உழவுக்கருவிகளைச் சுத்தம் செய்து சந்தனம், குங்கும் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம், காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங் காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள்.

உழவுக்கருவிகளைச் சுத்தம் செய்து சந்தனம், குங்கும் வைப்பார்கள். விவசாயத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் இதேபோல செய்வார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம், காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூஜைக்காக எடுத்து வைப்பார்கள்.

தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டி பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.

இது விவசாயிகளின் ஒரு நேர்த்திக் கடனாகும்.உலக நாடுகளில் கூடுதலான மக்கள் நெல் அரசிச் சோற்றையே தமது உணவாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வயலில் அறுவடை முடிந்ததும் தமது நிலத்துக்கு நெல்லின் அடிப்பாகத்தை உழவன் விட்டு விடுகிறான். அதில் கிடைக்கும் நெல்லை மனிதனுக்கு உணவாக்குகின்றான். வைக்கோலை தமது உழவுக்கு துணை புரியும் பசுக்களுக்கு உணவாகக் கொடுக்கின்றான். இதுவே மாட்டுப் பொங்கலின் ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றது. ■



# வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு நாட்டுப்புற கலைகளை பயிற்றுவிக்க ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

சென்னை, நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலக தமிழர் தினம் - 2025 விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார். இதில் கணியன் பூங்குன்றனார் விருதுகளை சிங்கப்பூர் நாட்டில் வசிக்கும் ரஜாராம் ராமசுப்பன் (கல்வி பிரிவு), ஜப்பான் நாட்டில் வசிக்கும் கமலக்கண்ணன் சண்முகம் (சமூக மேம்பாடு பிரிவு), ஐக்கிய அரபு அமீரகத்தில் வசிக்கும் தேவி சிவானந்தம் (மகளிர் பிரிவு) மற்றும் லட்சுமணன் சோமசுந்தரம் (வணிகப்பிரிவு), தென்கொரியா நாட்டில் வசிக்கும் ஆரோக்கிய ராஜ் (அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்), சிங்கப்பூரில் வசிக்கும் மருத்துவர் கங்காதர சுந்தர் (மருத்துவப் பிரிவு), இலங்கையில் வசிக்கும் கிருஷ்ணகாந்தன் சந்தீப் (சிறந்த பண்பாட்டு தூதுவர் வேர்களை தேடி) ஆகியோருக்கு தமிழ் மாமணி விருதினை அமெரிக்காவில் வசிக்கும் விஜய் ஜானகிராமன் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்.



இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: "தமிழ்தான் நம்மை இணைக்கும் தொப்புள் கொடி. அந்த உணர்வோடு உறவோடு தாய் மண்ணாம் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கும் உங்கள் எல்லோரையும், உங்களில் ஒருவனாக வரவேற்கிறேன். இந்த இனிய நிகழ்ச்சியில், உங்களுக்கான புதிய திட்டத்தின் அறிவிப்பையும் வெளியிட விரும்புகிறேன். பல்வேறு நாடுகளில் இருந்து நம் தமிழ் மொழி, நாட்டுபுற கலைகள், தமிழ் பண்ணிசைகளை அயலகத்தில் வசிக்கும் தமிழ் மக்களின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு நேரடியாக பயிற்றுவிக்கவேண்டும் என்று கோரிக்கைகள் வந்த வண்ணம் இருக்கிறது. அந்தவகையில், 100 ஆசிரியர்கள் மற்றும் தமிழ் கலைஞர்களுக்கு பயிற்சி கொடுத்து, இவர்களை அயலக தமிழர்கள் வாழும் பகுதிகளுக்கு தேவைக்கேற்ப அனுப்ப, ஒரு திட்டம் உருவாக்கப்படும்.

இந்த பயிற்றுநர்கள், அந்த பகுதியிலிருக்கும் தமிழ் சங்கங்களுடன் இணைந்து, தமிழ் மொழியையும், தமிழ் கலைகளையும் 2 ஆண்டுகளுக்கு நேரடி பயிற்சி வகுப்புகள் மூலமாக நடத்துவார்கள். இதற்கு ஆகும் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும். இதற்காக ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும். நீங்கள் எங்கு இருந்தாலும், தமிழ்நாட்டில் உங்கள் சகோதரன் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராக இருக்கிறேன் என்ற நம்பிக்கையோடு வாழுங்கள். அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்து, வாழ்வதும் வளர்வதும் தமிழாகவும் தமிழினமாகவும் இருக்கட்டும்" என அவர் பேசினார். ■



# பொங்கலன்றும் போராட்டம் வொஷிங்டன் சென்று முடிவெடுப்போம்





## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு...

நிர்வாகம் அழைப்பு விடுத்தால் வொஷிங்டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் தொடர்பில் விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

அத்தோடு நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்தும் பேசுவோம் என்றார்.

வவுனியாவில் பிரதான தபாலகத் திற்கருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இப் போராட்டத்தின் பின் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார்,

நாங்கள் நம்பிக்கையைக் கொண்டாடுகிறோம், ட்ரம்பை வாழ்த்துகிறோம், நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களைப் பெருக்குகிறோம்

எவ்வாறாயினும், இந்த நாள் ஒரு சோகமான மைல்கல்லை குறிக்கிறது: தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீண்டும் பெறும்வரை இடைவிடாத போராட்டத்தினை 2886 ஆம் நாளாக இடைவிடாது தொடர் போராட்டத்தினை வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக தொடர் போராட்டம்.

உலகில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்திற்கு எதிரான தனது நிலைப்பாட்டில் அமெரிக்கா தெளிவாக உள்ளது. சீனாவுக்கான ஆதரவு வெளிப்படையாகத் தெரிந்த இடங்களில், அரசியல் அல்லது கட்டமைப்பு மாற்றங்கள் பின்பற்றப்படலாம்.

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தமிழர்களாகிய நாம் வரவேற்கின்றோம். அவரது நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக உள்ளோம் எனத் தெரிவித்தார்.

## ரயிலில் பாய்ந்து உயிர் மாய்ப்பு



(பு.கஜிந்தன்)

யாழ்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலின் முன் பாய்ந்து இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிர் மாய்த்துக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் 2.30 மணியளவில் மீசாலை கமநல சேவைகள் திணைக்களத்திற்கு முன்பாக உள்ள புகையிரத பாதையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி பகுதியைச் சேர்ந்த 19 வயதான, திருமணமாகி இரண்டு மாதங்களான நவரத்தினம் நவாஸ்கரன் என்னும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## போயா தினத்தில் மதுபான விற்பனையில் ஈடுபட்டவர் கைது

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு பகுதியில் போயா தினத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

15 முழு போத்தல்களும் 165 கால் போத்தல்களும் 72 பியர் போத்தல்களும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக யாழ். மாவட்ட போதை ஒழிப்பு பிரிவும் இணைந்து நடத்திய சோதனையில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



## ஏழாலை கிழக்கில் பெருந்தொகை கசிப்புடன் ஒருவர் கைது



(பு.கஜிந்தன்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏழாலை கிழக்கு சிவன்கோவிலடி பகுதியில் கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் போன்றவற்றுடன் 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீண்ட காலமாகச் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 1 இலட்சத்து 10 ஆயிரம் மில்லிலீட்டர் கோடா, 40 ஆயிரம் மில்லிலீட்டர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் பொருட்களும் சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## மன்னாரில் மழைக்கு மத்தியில் தைப்பொங்கல்



(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து மற்றும் கத்தோலிக்க மக்கள் தைப்பொங்கல் பண்டிகையை நேற்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர்.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட தைப்பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பூஜை வழிபாடுகளும் செய்யப்பட்டன.

மேலும் வர்த்தக நிலையங்கள் நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் தைப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டதோடு விசேட திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மன்னார் பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் பொங்கல் பொங்கினர். மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்துவரும் நிலையில் மக்கள் அமைதியான முறையில் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி வருகின்றனர்.

## வவுனியாவில் தைப்பொங்கல் கொண்டாட்டம்

(கி.வசந்தன்)



உழவர் திருநாளான தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று இடம்பெற்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கு இணங்க தமிழ் மக்கள் தமது சூரியக் கடவுளுக்கு நன்றி தெரிவித்து தைப்பொங்கலை கொண்டாடி வருகின்றனர்.

வவுனியாவின் பிரதான ஆலயங்களில் ஒன்றாகிய கந்தசாமி ஆலயத்தில் புதுப் பானையில் புத்தரிசி இட்டு பொங்கல் இடம்பெற்றதுடன், ஆலய பிரதம குரு தலைமையில் விசேட அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றது.

இதன்போது, பக்த அடியார்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் பொங்கல் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். இதேபோல் ஏனைய இந்து ஆலயங்களிலும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரபஞ்ச நலத் தவவேள்வியின் நிறைவு நிகழ்வு





(நதீபரன்)

தென்னிந்தியாவின் திருமூர்த்தி மலையில் அமைந்துள்ள தென் கைலை உலக சமாதான ஆலயத்தில் பிரபஞ்ச நலத் தவவேள்வியின் நிறைவு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

வருடந்தோறும் உலகுவாழ் மக்களின் நன்மைக்காக, பிரபஞ்சத்தில் சாந்தியும் சமாதானமும் அமைதியும் வேண்டி நடத்தப்பட்டுவருகின்ற பிரபஞ்ச நல மகாதவ வேள்வித்தொடர் வரிசையில் இவ்வாண்டிற்கான 35 ஆவது தவவேள்வியானது கடந்த 22.12.2024 ஆம் ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்தது. இக்காலத்தில் 21 நாட்கள் தொடர்ச்சியாக உலக சமாதான ஆலய அறக்கட்டளை நிறுவனர் மற்றும் உலக அமைதி தூதர் ஞானவள்ளல் குருமகான் அவர்கள் தவவேள்வியினை பிரணவாலயத்தின் தவபீடத்திலிருந்து இயற்றி வந்துள்ளார். இந்நிகழ்வுகளையொட்டி இக்காலப்பகுதியில் பல்வேறு நாடுகளிலும் கூட்டுப்பிரார்த்தனைகள் மற்றும் சத்சங்கம், அருளுரைகள், அன்னதானங்கள் என்பன நடைபெற்றன. அந்த வகையில், தென் கைலை உலக சமாதான ஆலயத்தின் யாழ்ப்பாண கிளையினால் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய மண்டபத்தில் திருமூர்த்தி மலையிருந்து நிகழ்வுகள் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டதுடன் கலந்து கொண்டவர்களுக்கு இறை பிரசாதங்களும் வழங்கப்பட்டன.





**தைப்பொங்கலை முன்னிட்டு சிறப்பு திருப்பலி விடத்தல்தீவு புனித அடைக்கல மாதா தேவாலயத்தில் பங்குத்தந்தை அருட்பணி ஜெகானந்தன் அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.** (படங்கள்.எஸ்.ஆர்.லெம்பேட்)

## வல்லிபுர ஆழ்வார் கோயிலில் பொங்கல் விசேட பூசைகள்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் – வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் தைப்பொங்கல் விசேட பூஜைகள் அதன் பிரதம குரு ஸ்ரீமான் பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வர குருக்கள் தலைமையில் காலை 8:00 மணியளவில் இடம்பெற்றது.

காலை 5.00 மணியளவில் விசேட ஹோம பூஜைகள் இடம்பெற்று, 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசைகள், அதனைத் தொடர்ந்து வல்லிபுரத்து சக்கரத்து ஆழ்வார் உள்வீதி வலமும் இடம்பெற்றது.

# நீரிழிவு நோயாளிகள்

## எந்த உணவை சாப்பிடலாம்? எதை சாப்பிடக்கூடாது?

உலகளவில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதற்கு முதன்மையான காரணம் வாழ்க்கை முறையும், உணவுப் பழக்க வழக்கங்களும் தான். ஒருவருக்கு நீரழிவு நோய் வந்துவிட்டால், அதை முழுமையாக குணப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்படுத்தலாம்.

முக்கியமாக நீரிழிவு நோய் வந்தவர்கள் உண்ணும் உணவுகளில் கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டும். அதுவும் ஸ்நாக்ஸை தேர்ந்தெடுத்து உண்ணும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

### எந்த ஸ்நாக்ஸை சாப்பிடலாம்?

பொதுவாகவே நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அனைத்து உணவுகளின் மீதும் நாட்டம் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்களுக்கு இனிப்பான உணவுகள் மீது அதிகமான விரும்பம் தோன்றும் எனவும் கூறப்படுகின்றது.



கொய்யாப்பழம், வெள்ளரிப்பழம், நெல்லிக் காய், தேங்காய், நிலக்கடலை, முளைகட்டிய பயறு, பாதாம், முட்டை, காய்கறிகள், அரைவாசி சமைத்த மரக்கறிகள் போன்றவற்றை ஸ்நாக் வடிவில் உட்கொள்வது அவர்களின் ஆரோக்கி யத்தை மேம்படுத்துவதோடு இரத்தத்தில் நீரிழவின் அளவையும் கட்டுப்பாடாக வைத்துக் கொள்ளும்.

### எதை சாப்பிடக்கூடாது?

கொழும்பு அதிகம் நிறைந்த உணவுகள், இனிப்பு வகைகள், இனிப்பு சுவை இயற்கையாகவே அதிகமாக உள்ள பழங்கள், பிஸ்கட்டுகள், வடை – பஜ்ஜி போன்ற எண்ணையில் பொரித்த உணவுகள், டீ, காபி போன்ற உணவுகளை முற்றிலும் தவிர்ப்பது சிறந்தது.





ஒருவன் HEALTH GOALS



எஸ்.டொரின்

சுகவாழ்வுக்கோர் வழி

**பொதுவாக சிலர் இரவு உணவு சாப்பிட்ட உடனேயே தூங்குவார்கள். மேலும் சிலர் குளிக்கிறார்கள். சிலர் புகை பிடிப்பார்கள். ஆனால் நடைமுறையில் சொல்வதென்றால் இரவு உணவுக்குப் பிறகு இவற்றைச் செய்யக்கூடாது.**



### நடைபயிற்சி

இரவு உணவு சாப்பிட்ட உடனேயே சிறிது நேரம் நடக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. இவ்வாறு செய்வது உடல் நலத்திற்கு நல்லது என்றும் கூறப்படுகிறது. ஆனால் அது முற்றிலும் உண்மை இல்லை. ஏனெனில் சாப்பிட்ட உடனே நடைப்பயிற்சி செய்வதால் கை, கால்களுக்கு இரத்தம் செல்லும். இது செரிமானத்தில் குறுக்கிடுகிறது. எனவே சாப்பிட்ட உடனே நடக்க வேண்டாம். ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரம் கழித்து நடக்கலாம்...

### தண்ணீர்

நம் உடலுக்கு தண்ணீர் தேவை. ஆனால் அதை சரியான நேரத்தில் குடிக்க வேண்டும். குறிப்பாக இரவு உணவுக்குப் பிறகு தண்ணீர் குடிக்கவே கூடாது. குறைந்தது 30 முதல் 60 நிமிடங்கள் காத்திருக்கவும். இல்லையெனில், அந்த நீர் செரிமான அமைப்பின் வேலையைத் தடுக்கும். இதனால் மலச்சிக்கல் பிரச்சனை ஏற்படுகிறது.

### பழங்கள் சாப்பிடுவது

இரவு உணவு உண்ட உடனேயே பழங்கள் சாப்பிடுவதை பலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆனால் அதை செய்யக் கூடாது. ஏனெனில் இரவு உணவிற்குப் பிறகு பழங்களைச் சாப்பிட்டால் வயிறு வீங்கிவிடும். வாயு பிரச்சனைகள் ஏற்படும். மேலும், சாப்பிட்டதும் சரியாக ஜீரணமாகாது.

### பல் துலக்குதல்

இரவு உணவு உண்ட உடனேயே பல் துலக்கும் பழக்கமும் பலருக்கும் உண்டு. ஆனால் அதை செய்யக்கூடாது.. ஏனெனில் பற்களில் உள்ள எனாமல் அடுக்கு அகற்றப்படுகிறது. அப்போது பற்கள் இயற்கையான பொலிவை இழக்கும். எனவே இரவு உணவு உண்ட உடனே பல் துலக்க வேண்டாம். குறைந்தது 30 நிமிடங்களாவது காத்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் பல் துலக்க வேண்டும்.

### புகைபிடித்தல்

இரவு உணவிற்குப் பிறகு உடனடியாக புகைபிடிக்கக்கூடாது, எந்த நேரத்திலும் புகைபிடிக்கக்கூடாது. அது உங்களின் உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும்.. மேலும் இது புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. ஆனால் அந்தப் பழக்கத்தை நிறுத்த முடியாதவர்கள் இரவு உணவையாவது நிறுத்துவது நல்லது. ஏனெனில் இரவு உணவிற்குப் பிறகு



புகைபிடிப்பது சாதாரண நேரத்தில் புகைபிடிப்பதை விட புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது.

### டீ மற்றும் காபி குடித்தல்

பலர் இரவு உணவிற்குப் பிறகு உடனடியாக டீ அல்லது காபி குடிப்பார்கள். நைட் ஷிப்ட் இல் குடிப்பவர்கள் இன்னும் அதிகம். உண்மையில் இரவு உணவிற்குப் பிறகு உடனடியாக டீ அல்லது காபி குடித்தால், செரிமானம் பாதிக்கப்படும். வாயு மற்றும் அமிலத்தன்மை பிரச்சனைகள் ஏற்படும். உண்ணும் உணவில் உள்ள சத்துக்கள் உடலுக்கு கிடைக்காது. முக்கியமாக இரும்புச்சத்து உடலால் உறிஞ்சப்படாது.. எனவே சாப்பிட்ட உடனேயே காபி, டீ குடிக்க வேண்டாம்.

### குளித்தல்

சாப்பிட்ட உடனேயே குளித்தாலும், உடலின் மற்ற பாகங்களுக்குச் செல்லும் இரத்தம் செரிமான மண்டலத்துக்குச் சரியாகப் போவதில்லை. இதனால் செரிமானம் சீராக நடைபெறாது.

### தூங்கும் நேரம்

இரவு உணவு உண்ட உடனே தூங்க வேண்டாம். இவ்வாறு செய்வதால் செரிமான பிரச்சனைகள் ஏற்படும். வாயு மற்றும் அமிலத்தன்மை அதிகரித்து, உண்ணும் உணவு கொழுப்பாக மாறும். எனவே அப்போது அதிக எடை கூடும். அதனால் படுக்கைக்குச் செல்வதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன் சாப்பிட்டுவிடுங்கள்...

## வாரமொரு மூலிகை அறிவோம்...

### மிளகின் மகத்துவம்

வியாபார ரீதியில் விற்பனை செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் மிளகு, பைப்பெரசியயி குடும்பத்தை சேர்ந்த பைப்பெர் நிக்ரம் எல் என்ற நீண்ட காலம் வாழும் வெப்ப மண்டல தாவரத்தின் முதிர்ந்த பழங்களின் உலர்ந்த வடிவம் ஆகும்.

மிளகு முக்கியமாக இலங்கை, மற்றும் இந்தியாவில் அதிகமாக பயிரிடப்படும் ஒரு மருத்துவ குணம் மிகுந்த உணவுப்பொருள் என்றே கூறலாம்.

புராதான காலத்தில் இருந்தே இலங்கையில் மிளகை பயிரிடுதல், மற்றும் அவற்றை இறக்குமதி – ஏற்றுமதி செய்தல் நன்கு அறியப்பட்டதாகும்.

இங்கிருந்து மிளகு, இந்தோனே ஷியா, மலேசியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. பின்னர் அது, மிளகு விளைவிக்கின்ற அனைத்து நாடுகளுக்கும் பரவியது.

மிளகு, அதன் தனித்துவமான நறுமண சுவை, மற்றும் குணமளிக்கும் பண்புகளுக்காக, சர்வேத சந்தையில் மிகவும் புகழப்படுகின்ற ஒன்றாகும்.

பொதுவாக “மிளகு” என்று குறிப்பிடப்படும் கருப்பு நில மிளகு விதை, உலகம் முழுவதும் ஏறத்தாழ அனைத்து சாப்பாட்டு மேஜைகளிலும் காணப்படுகின்ற, உணவகங்களிலும் கூட மேஜையில் உப்புடன் அடிக்கடி காணப்படக் கூடியதாகும்.

#### மிளகைப் பற்றிய சில அடிப்படை விவரங்கள்:

| | |
|---|---|
| **அறிவியல் பெயர்** | **: பைப்பெர் நிக்ரம்** |
| **குடும்பம்** | **: பைப்பெரசியயி** |
| **பொதுவான பெயர்** | **: மிளகு** |

**சொந்த பிராந்தியம் மற்றும் புவியியல் பரவல்:** மிளகு முக்கியமாக தென்னிந்தியாவை சேர்ந்தது ஆகும்.

**வேடிக்கையான உண்மைகள்:** தற்போதைய சூழ்நிலையில் அமெரிக்கா, மிளகை மிக அதிக அளவில் உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறது.

2009ஆம் ஆண்டு அந்த நாடு, சுமார் 671 மில்லியன் டொலர்கள் அளவுக்கு மிளகு இறக்குமதி செய்திருக்கிறது. அது, உலகத்தின் மொத்த மிளகு அளவில் கிட்டத்தட்ட 18% ஆகும்.



ஒரு குறிப்பிட்ட உணவகத்தில் மாசாலாப் பொருட்களின் பயன்பாட்டில் மிளகு 50% பங்கு வகிக்கிறது. மத்திய காலத்தின் போது, எடையின் அடிப்படையில் மிளகுகள், வெள்ளியை விட அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டன.

## வெறும் வயிற்றில் பூண்டு; நிகழும் அற்புத மாற்றங்கள்

தற்போது உடல் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ள மக்கள் பல்வேறு பழக்கவழக்கங்களை பின்பற்றுகின்றனர். அதுவும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த பல்வேறு உணவுப் பொருட்கள் நம் வீட்டு சமையலறையில் உள்ளன.

அதில் ஏராளமான மருத்துவ பண்புகளைக் கொண்ட ஒரு பொருள் தான் பூண்டு. இந்த பூண்டு தினசரி உணவில் நல்ல மணத்திற்காகவும், சுவைக்காகவும் சேர்க்கப்பட்டு வந்தாலும், இந்த பூண்டில் உள்ள முழு சத்துக்களையும் பெற சிறந்த வழி, அதை பச்சையாக சாப்பிடுவது தான்.

பூண்டில் அல்லிசின், சல்பர், செலினியம், அத்தியாவசிய வைட்டமின்களான பி6 மற்றும் சி போன்ற சக்தி வாய்ந்த சத்துக்கள் உள்ளன. இந்த சத்துக்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது முதல் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவது வரை பல நன்மைகளை வழங்குகின்றன. நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்த விரும்பினால், பூண்டு பற்களை காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுங்கள்.



காலையில் வெறும் வயிற்றில் 1 பல் பூண்டு சாப்பிடுவதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதைக் காண்போம்.

### நோயெதிர்ப்பு சக்தி மேம்படும்

பூண்டு பற்களை தினமும் காலையில் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகளுள் ஒன்று, உடலின் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்துவதாகும். பூண்டில் அல்லிசின் என்னும் பொருள் உள்ளது.

இது உடலினுள் நுழையும் நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராட தேவையான ஆற்றலை உடலுக்கு வழங்குகின்றது. எனவே உங்களுக்கு அடிக்கடி சளி பிடித்தாலோ அல்லது நீங்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு வந்தாலோ, உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, 1 பூண்டு பல்லை தினமும் காலையில் உட்கொண்டு வாருங்கள். இதனால் நோயெதிர்ப்பு மண்டலம் வலுப்பெறும்.

### இரத்த அழுத்தம் சீராகும்

இன்று பெரும்பாலானோர் அவதிப்படும் ஒரு பொதுவான பிரச்சனை தான் உயர் இரத்த அழுத்தம். ஆனால் பூண்டு இரத்த அழுத்த அளவில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆய்வு ஒன்றில், பூண்டில் உள்ள அல்லிசின் என்னும் பொருள் இரத்த நாளங்களை தளர்வடையச் செய்து, இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவது தெரியவந்துள்ளது. எனவே உங்களுக்கு இரத்த அழுத்த பிரச்சனை இருந்தால், அதைக் கட்டுப்படுத்த காலையில் வெறும் வயிற்றில் ஒரு பல் பூண்டு சாப்பிடுங்கள்.

இதனால் நல்ல பலனைப் பெறலாம். கெட்ட கொலஸ்ட்ரோல் குறையும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் பூண்டு மிகச்சிறந்த பொருள். ஒருவர் பூண்டு பற்களை தினசரி உணவில் அதிகமாக சேர்த்து வந்தால், உடலில் உள்ள கெட்ட கொலஸ்ட்ரோல் குறைவதோடு, இதய நோயின் அபாயமும் குறையும்.

அதுவும் இதில் உள்ள அன்ரி – ஒக்ஸிடன்ட்டுகள் தமனிகளில் ப்ளேக்குகள் படிவதைத் தடுத்து, இரத்த ஓட்டத்தை மேம்படுத்துகின்றன.

### செரிமானம் மேம்படும்

பூண்டு இதய ஆரோக்கியம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி, செரிமான ஆரோக்கியத்தையும் மேம்படுத்த பெரிதும் உதவி புரிகிறது.

அதுவும் இது வயிற்றில் நன்மை விளைவிக்கும் பக்டீரியாக்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. வயிற்றில் இந்த வகை பக்டீரியாக்கள் சிறப்பாக இருந்தால், அது செரிமானத்தை மேம்படுத்துவதோடு, ஊட்டச்சத்துக்களை உறிஞ்சவும் உதவி புரிகின்றன.

ஆகவே செரிமான பிரச்சனைகளை அதிகம் சந்திப்பவர்கள், அதிலிருந்து விடுபட காலையில் வெறும் வயிற்றில் 1 பல் பூண்டு சாப்பிட்டு, சுடுநீரை குடித்து வர, செரிமானம் மேம்படும்.

### அழற்சியை குறைக்கும்

நாள்பட்ட அழற்சியானது உடலில் ஆர்த்ரிடிஷ், இதய நோய் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். ஆனால் பூண்டில் உள்ள சக்தி வாய்ந்த அழற்சி எதிர்ப்பு பண்புகள் உடலினுள் உள்ள அழற்சியைக் குறைக்க உதவுகிறது.

அதற்கு பூண்டு பற்களை தினசரி உணவில் சேர்ப்பதோடு, காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டு வந்தால், இன்னும் சிறப்பான பலனைப் பெறலாம் வெற்று வயிற்றில் பூண்டு சாப்பிடுவதற்கான சரியான வழி எப்படி எனத் தெரிந்து கொண்டு சாப்பிடுவது நல்லது.

பூண்டு சாப்பிட நினைப்பவர்கள், காலையில் ஒரு பூண்டு பல்லை நன்கு மென்று சாப்பிட்ட பின் ஒரு டம்ளர் சுடுநீரை குடிக்க வேண்டும். இப்படி உட்கொள்ளும் போது, பூண்டில் உள்ள அல்லிசின் செயல்படுத்தப்பட்டு, உடலுக்கு பல்வேறு நன்மைகளை வழங்கும்.



# மோசமான எச்சங்களை அகற்றவே மக்கள் ஆணையளித்துள்ளனர்

## அநுராதபுரத்தில் சபாநாயகர்



(எம்.ரீ.ஆரிப்)

புதிய நாடாளுமன்றத்தில் மோசமான எச்சங்கள் இருக்கக் கூடும் என்பதால் தான், எதிர் காலத்தில் அதனை அகற்றுவதற்கு, மக்கள் ஆணையளித்துள்ளதாகவும் ஆக்கபூர்வமான நாடாளுமன்றம் தற்போது உருவாக்கப்படுமெனவும் ருவன்வெலி சாயவை வழிபட்டு ஆசிர்வாதம் பெறவந்த சபாநாயகர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

புதிய சபாநாயகர் அநுராதபுரம் வரலாற்று சிறப்புமிக்க ஜய ஸ்ரீ மஹா போதி மற்றும் ருவன்வெலி சாயவுக்கு அண்மையில் விஜயம் செய்து ஆசிர்வாதம் பெற சென்ற போதே நாயக்க தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லதொரு நாடாளுமன்ற கலாசாரத்தை உருவாக்க நாடாளுமன்றத்தின் அதிகாரம் சபாநாயகருக்கே உரியது. எனவே அதனை முறையாக பிரயோகிக்குமாறு புதிய சபாநாயகர் டொக்டர் ஜகத் விக்ரமரத்னவிடம் அட்டமஸ்தானாதிபதி வணக்கத்துக்குரிய பல்லேகம ஹேமரத்தன நாயக்க தேரர் தெரிவித்தார்.

சபாநாயகர் முதலில் ருவன்வெலி சாயவை வழிபட்டு ஆசிர்வாதம் பெற்ற பின்னர் ஜயஸ்ரீ மஹாபோதியை வழிபட்டார்.

நாட்டுக்கும் மக்களுக்கும் சாதகமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசியலமைப்பு சட்டம் செயற்பட்டு வருவதாகவும் தற்போதைய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களின் நடத்தை சாதகமாக இருப்பதாகவும் சபாநாயகர் நாயக்க தேரரிடம் தெரிவித்தார்.

ருவன்வெலிசாய விஹாரையின் வணக்கத்துக்குரிய ஈத்தல்வட்டுனுவெவே ஞானதிலக நாயக்க தேரர் நாட்டில் ஏற்பட வேண்டிய புதிய அபிவிருத்தி மற்றும் மாற்றங்கள் குறித்து புதிய சபாநாயகரிடம் தெரிவித்தார்.

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்பு தோல்வி



நாட்டு மக்கள் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆனால், மக்களின் எதிர்பார்ப்பு தோல்வியடைந்துள்ளதெனத் தெரிவித்த சர்வஜன சக்தியின் உப தலைவரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எம். சந்திரசேன, நாட்டு மக்களை பட்டினியில் வைத்துக் கொண்டு நாட்டை தூய்மைப்படுத்த முடியாதெனவும் தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வாய்ச்சொல் வீரரே தவிர, செயல் வீரரல்ல என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிட்டோம்.1 இலட்சத்துக்கு 45 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான அரிசி தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் சந்தையில் அரிசி தட்டுப்பாடு தொடர்கிறது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை தொடர்பில் எழுந்த பிரச்சினைக்கு அரசாங்கம் முறையான தீர்வினை பெற்றுக்கொடுக்கவில்லை.

இதனால் தான் சில்லறை அரிசி வர்த்தகர்கள் அரிசியை கொள்வனவு செய்ய முன்வருவதில்லை. அரிசிக்கு தட்டுப்பாடு காணப்படுவதால் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகிறது.

விவசாயம் செழிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழர்கள் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். இம்முறை பொங்கல் பொங்குவதற்கும் பச்சையரிசி இல்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20 கிலோ கிராம் அரிசியை நாட்டு மக்களுக்கு இலவசமாக வழங்கியதால் தான் பச்சையரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்கம் சிறுபிள்ளைத் தனமாக குறிப்பிடுகிறது.

நாட்டு மக்களை பட்டினியில் வைத்துக் கொண்டு நாட்டை தூய்மைப்படுத்த முடியாது.

கோட்டபய ராஜபக்ஷ சேதன பசளைத் திட்டத்தை அமுல்படுத்தியதை போன்று கிளீன் ஸ்ரீ லங்கா செயல்திட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என்றார்.

# சீரற்ற காலநிலைக்கு மத்தியில் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள்



(க.மகாதேவன்)

சீரற்ற காலநிலைக்கு மத்தியில் உழவர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு நேற்று (14) புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஆலயங்களிலும், வீடுகளிலும் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தில் தைத்திருநாளை முன்னிட்டு விசேட பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன.

காலை சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆலய முன்றிலில் பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு சூரிய பகவானுக்கு விசேட பூஜைகள் நடைபெற்றன.

ஆலயத்தின் வண்ணக்கமார்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் பொங்கல் படைக்கப்பட்டு ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ குமார பஞ்சாட்சர குருக்கள் தலைமையில் விசேட பூஜைகள் நடைபெற்றன.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லாசிவேண்டியும் விவசாயிகள் சிறந்த விளைச்சலைப் பெற வேண்டியும் பூஜைகளும் பிரார்த்தனைகளும் செய்யப்பட்டன.

தைத்திருநாள் விசேட பொங்கல் பூஜையில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டதுடன் பொங்கல் வாழ்த்துகளையும் தங்களுக்குள் தெரிவித்துக் கொண்டனர்.

# ஹம்பாந்தோட்டையில் தொடர் மழை; இயல்பு நிலை பாதிப்பு

(ஹம்பாந்தோட்டை நிருபர்)

ஹம்பாந்தோட்டை எங்கும் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழையின் காரணமாக மக்களது அன்றாட வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

தற்பொழுது காலநிலை அடிக்கடி மாற்றமடைந்து வருவதினால் மிகவும் உஷ்ணமான காலநிலையினை கொண்டு காணப்பட்ட ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் அடிக்கடி மழை பெய்கிறது இதனால் மக்கள் தங்களது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களுக்கு நாளாந்தம் முகம் கொடுத்து வருகின்றனர்.

அன்றாட கூலித் தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாமல் வீடுகளுக்குள் முடங்கி வருவதோடு கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் மீனவர்களுக்கும் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக உப்பு உற்பத்தியினை மேற்கொள்ள முடியாத நிலையில் உப்பு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை பெய்ய ஆரம்பித்தவுடன் நுளம்பு பெருக்கமும் அதிகரித்து காணப்படுவதினால் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் டெங்கு நோய்க்கு ஆளாகும் தொகையும் அதிகரித்து காணப்படுகிறது. இவற்றுடன் சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் தடிமல், இருமல் மற்றும் சளி ஆகிய நோய்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

# 'காலங்கள் பேசும் காவியங்கள்' நூல் கண்காட்சி

(ஐ.ஏ.காதிர் கான் )

சென்னை – கன்னிமாரா நூலகப் புத்தகக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த "காலங்கள் பேசும் காவியங்கள்" என்னும் 11000 கவிதைகள் அடங்கிய தொகுப்பு நூல் புத்தகக் கண்காட்சி, நேற்று (12) ஞாயிற்றுக் கிழமையுடன் சிறப்புற நிறைவு பெற்றது.

"கவிதைக்களம் காவிபாவை குழுமம்" சார்பாக வைக்கப்பட்டிருந்த இந்த 11,000 கவிதைத் தொகுப்பு நூல் சர்வதேச புத்தகக் கண்காட்சியில், மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், "வசந்தா பதிப்பகம்" பதிப்பாளர் முனைவர் மோ.பாட்டழகன். "இளவரசி" மாத இதழ் ஆசிரியர் எழுத்தாளர் சங்கமித்திரை, சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பி.எஸ். அகிலன், கவிஞர் ஆனந்தி துறைவன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

"கவிதைக்களம் – கவிபாவை குழுமம்" சார்பாக, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட இந்நூலின் தொகுப்பு ஆசிரியர் "கலை மாமணி" கவிபாவை கார்த்திக் என்பவரது படைப்பாகும்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

புதிய வருடத்திலிருந்து இது வரையான காலப்பகுதிக்குள் 2,045 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த வருடத்தில் மாத்திரம் 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டனர். இதேவேளை, 24 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. 1 தொடக்கம் 4 வயதுக்கு இடைப்பட்ட இரு சிறுமிகள் உள்ளடங்கலாக 20 பெண்களும் 4 ஆண்களும் கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, காலி, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் அடையாளம் காணப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையிலும் தொடர்ச்சியான அதிகரிப்பைக் காணக் கூடியதாகவுள்ளதென அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மின்கம்பத்துடன் மோதிய அம்பியூலன்ஸ் வண்டி

(ரஸீன் ரஸ்மின்)




புத்தளம் – வனாத்தவில்லு வீதியில் 10ஆம் கட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் (13) மாலை அம்பியூலன்ஸ் வண்டி வீதியை விட்டு விலகி, மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

சம்பவத்தின்போது அம்பியூலன்ஸ் வண்டியில் சாரதியை தவிர, வேறு யாரும் இருக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வனாத்தவில்லு பிரதேச வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியூலன்ஸ் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அம்பியூலன்ஸ் வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வனாத்தவில்லு பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்ற மருத்துவ சிகிச்சைக்காக புத்தளம் வைத்தியசாலையிலிருந்து மருத்துவர் ஒருவரை அழைத்துச் சென்றுவிட்டு, சிகிச்சை முடிந்த பின்னர் அந்த மருத்துவரை மீண்டும் புத்தளம் வைத்தியசாலையில் விட்டுவிட்டு வனாத்தவில்லு நோக்கி சென்று கொண்டிருந்த போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் வனாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

(கியாஸ் ஷாபி)

திருகோணமலை சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (13) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் கவிந்திர பிரேமவன்ச தலைமையில் நடைபெற்ற நிகழ்வை திருகோணமலை சிறைச்சாலை யும், இலங்கை சிறைச்சாலைகள் ஐக்கியமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட சிறைக்கைதிகள் மற்றும் மரண தண்டனை, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதிகளின் பிள்ளைகளுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மற்றும் சிறைச்சாலை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஹம்பாந்தோட்டை ஸாஹிராவில் சின்னம் அணிவிக்கும் நிகழ்வு



(ஹம்பாந்தோட்டை நிருபர்)

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். எம்.எம். ரிஸான் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விசேட அதிதியாக ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் முன்னாள் அதிபரும் ஆசிரிய ஆலோசகருமாகிய எம்.எப்.எம் ஸலீம் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக ஹம்பாந்தோட்டை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரார்தனா ஜயசூரியவும் கலந்து சிறப்பித்தார். பாடசாலையின் பிரதி அதிபர் எம்.சீ.எஸ்.பாயிஸா பாடசாலை அபிவிருத்தி நிர்வாக கமிட்டி செயலாளர் எம்.எ.எம்.அஸாத் மற்றும் உறுப்பினர்களுடன் பெற்றோர்களும் மேலும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர் தலைவர்களாக இவ்வருடத்தில் தெரிவு செய்யப்பட்டோர் சின்னம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்கள்.

# அரசியல் கைதிகளின் விடுதலையை கோரி கையெழுத்து சேகரிப்பு

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும் அரசிடம் கோரிக்கை வைத்து, வடக்கு கிழக்கு முழுவதும் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுத்தது வரப்படுகிறது. திருகோணமலை சிவன் கோவிலடியில் நேற்றுமுன்தினம் (13) கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.



மேலும், நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டு பின்னரும், நீதிமன்றத் தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீளவும் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளை விடுதலை செய்யக் கோரியும் இந்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கல் கொண்டாட்டம்





உலகவாழ் இந்துக்கள் தைப்பொங்கலை நேற்று செவ்வாய்க்கிழமை (14) வெகு விமர்சையாக கொண்டாடினார்கள். திருகோணமலையில் தைப்பொங்கலை தங்களது வீட்டில் கொண்டாடியதைக் காணலாம்.
( படங்கள் ஏ.எச் ஹஸ்பர்)

# கிழக்கு ஆசிரியர் நியமனத்துக்கு நாளை 16 முதல் நேர்முக பரீட்சை

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் பட்டதாரி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முக பரீட்சைகள் நாளை16,17,18 ஆகிய தினங்களில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடாத்தப்படுமென அதன் செயலாளர். ஜே.லியாக்கத் அலி அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரிகள் தொழில் பிரயோகப் பரீட்சைக்கு உடனடியாக அனுமதிக்கப்பட உள்ளனர்.

ஆசிரியர் நியமனத்திற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் மேற்படி போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்ற 1105 பேர் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.இவர்களில் 98 பேர் சிங்கள மொழி மூல விண்ணப்பதாரிகளாவர் எனவும் அவர் தெரிவித்தார்.

தகுதியுள்ள அனைவருக்கும் நேர்முக பரீட்சைக்கான அழைப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அழைப்புக் கடிதம் கிடைக்கப் பெறாதோர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு இணையத்தளத் தில் பார்வையிடலாம்.

# சிறுவர் பொழுதுபோக்கு பூங்கா திறந்து வைப்பு

(ஜௌபர் ஏ.கரீம்)

சிறுவர்களின் உள வளத்தை செழிப்புறச் செய்வதற்கும் பொழுதுபோக்கு மேம்பாட்டுக்காகவும் சம்மாந்துறை பிரதேச சபையினால் சுமார் 31 மில்லியன் ரூபா செலவில் ஆலையடி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்ட சிறுவர் பொழுதுபோக்கு பூங்காவை திறந்துவைக்கும் நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். எல்.ஏ.கமல் நெத்மினி பிரதம அதிதியாக கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இதன் போது பசுமை பூங்காவாக மிளிரச்செய்யும் வகையில் அதிதிகள் மரக்கன்றுகளையும் நட்டிவைத்தனர்.





இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான நிஸாட் எம் புஹாரி, கட்டிட திணைக்களத்தின் கல்முனை பிராந்திய பிரதம பொறியியலாளர் பி. அச்சுதன், சம்மாந்துறை பெரிய பள்ளிவாசல் தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான ஐ.எம் ஹனிபா, மஜிலிஸ் அஸ்ஸூரா நிர்வாக செயலாளர் எம்.எல்.எச். ஜௌபர், ஆய்வு உத்தியோகத்தர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# சிலோன் மீடியா போரத்தின் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

(பாறுக் ஷிஹான்)

சிலோன் மீடியா போரத்தின் ளூடுயுளூ ஆளுமைகளுடனான சந்திப்பும் கௌரவிப்பும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (13) அட்டப்பளம் அட்டப்பளம் தனியார் விடுதியில் போரத்தின் தலைவர் ரியாத் .ஏ .மஜீத் தலைமையில் அமைப்பின் ஐந்தாவது வருட நிறைவையொட்டி இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலை நிகழ்வுகளுடன் சிரேஷ்ட சேவை நிர்வாக அதிகாரிகள் உட்பட



சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் என பலரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதி யாக மேல் நீதிமன்ற நீதிபதி அப்துல்லாஹ், விசேட அதிதியாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வே. ஜெகதீசன், என்.எஸ். கன்ஸ் ரக்ஷன் எஞ்ஜினெரிங் கம்பனி முகாமைத்துவ பணிப்பாளர் நியாஸூம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# தோப்பூர் பிராந்திய மருத்துவமனைக்கு ஆளுநர் கண்காணிப்பு விஜயம்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர திங்கட்கிழமை (13) மூதூ ர் பிரதேச செயலக தோப்பூர் பிராந்திய மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தோப்பூர் பிராந்திய மருத்துவம னையின் பிரச்சி னைகள் குறித்து மருத்துவமனை ஊழியர்களிடம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் கேட்டறிந்து கொண்டார்.




# நற்பிட்டிமுனையில் இரத்தான முகாம்

(பாறுக் ஷிஹான்)

“உதிரம் கொடுத்து உயிர் காப்போம்“ என்ற தொனிப் பொருளின் அடிப்படையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை யுடன் இணைந்து நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் சுகாதாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் இரத்தான முகாம் நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலய ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத் திக்கான ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் வீ.ரீ. கனூன் தலைமையில் நடைபெற்றது. இம்மாபெரும் இரத்ததான முகாமில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் மற்றும் சக உத்தியோகத்தர்களின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது.

இம் மாபெரும் இரத்ததான முகாமில் நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் உயர்பீட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



# றொட்டவெவ – மிரிஸ்வெவ வீதியின் அவலம்





( அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை-மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுட்பட்ட றொட்டவெவ, மிரிஸ்வெவ வீதியை புனரமைப்பு செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதியால் மீனவர்கள் மற்றும் சேனைப் பயிர்ச் செய்கையாளர்கள் தொடர்ச்சியாக பயணம் செய்து வருவதுடன் உழவு இயந்திரங்களும் இவ்வீதியால் செல்வதாகவும் சுட்டி காட்டுகின்றனர். மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே குறித்த வீதியை மிக விரைவாக விவசாயிகளின் நலன் கருதி புனரமைப்பு செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் கைது

(கே. எ .ஹமீட்)

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாடசாலையொன்றுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (13) இரவு சம்மாந்துறை பொலிஸ ாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கருவாட்டுக்கல் 02 பகுதியைச் சேர்ந்த 18 வயதுடையவராவார். சந்தேக நபரிடமிருந்து ஒரு தொகை ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. சில சான்றுப் பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ. நஸார், தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் ரபாயீடீன், பொலிஸ் உத்தியோகத்தர் எம்.ஏ. பாஷரூக் போன்ற அதிகாரிகள் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய மீனவரின் அத்துமீறல்

# தமிழ் நாடு சென்றுள்ளவர்கள் காத்திரமான தீர்வினை பெற்றுக் கொள்ள முயல வேண்டும்



இந்திய கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு, இந்தியா சென்றுள்ள தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயல வேண்டும் என ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

அயலக தமிழர் தின விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழகம் சென்றிருக்கின்ற நிலையிலேயே முன்னாள் கடற்றொழில் அமைச்சரினால் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

'தமிழகத்தில் தற்போது இருக்கின்ற தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரம் தொடர்பாக தமிழக முதலமைச்சர் உட்பட்ட தலைவர்களுடன் கலந்துரையாடி எமது கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அவலங்களை எடுத்துரைக்க வேண்டும்.

அதேபோன்று, தமிழக மக்களுக்கும் உண்மைகளை தெளிவுபடுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களில் குறித்த பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதற்கு எம்மால் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக தமிழக முதலமைச்சர் உட்பட்ட தமிழக தலைவர்களை சந்தித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை சாத்தியமாகவில்லை.

எனவே, தற்போது கிடைத்திருக்கின்ற அரிய வாய்ப்பினை பயன்படுத்தி, எமது வளங்கள் அழிக்கப்படுவதையும், எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார சுரண்டல்களை நிறுத்துவதற்கும் முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மீன் வியாபாரியை கொலை செய்ய 2 மில்லியன் ரூபாய் ஒப்பந்தம்

மீன் வியாபாரியை கொலை செய்ய 2 மில்லியன் ரூபாய் ஒப்பந்தம் வழங்கப்பட்டதால் கொலை செய்தோமென சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கண்டி, வத்தேகம நகரில் மீன் வியாபாரி ஒருவர் கடந்த 3 ஆம் திகதி அவரது வீட்டிற்கு முன்பாக கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று சந்தேக நபர்களுடன், கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் நான்கு வாள்களும், மூன்று இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட மீன் வியாபாரியின் கடைக்கு அடுத்துள்ள கடையில் உள்ள மீன் வியாபாரியால், குறித்த மீன் வியாபாரியை கொலை செய்ய 2 மில்லியன் ரூபாய் ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகவும், அதன்படியே கொலை செய்யப்பட்டதாகவும் சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாத்தளை பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியகம் மேற்கொண்ட விசாரணையின் போது, சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் காலி கரந்தெனிய பகுதியிலுள்ள ஒரு வீட்டில் மறைந்திருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் போது, மற்றைய சந்தேக நபர் காலி அம்பலாங்கொடையில் உள்ள அவரது வீட்டில் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணையில், கொழும்பின் தலங்கம பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கொலைக்கு பயன்படுத்தப்பட்ட நான்கு வாள்களை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளை பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் மேற்கொண்டு வருகிறது.

# இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்பட வேண்டும்



(பு.கஜிந்தன்)

இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மறவன்புலவு கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் திங்கட்கிழமை காலை (13) இடம்பெற்றது.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில் தொடர்ந்து கூறியதாவது,

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இருபோகத்தை மேற்கொள்கின்றன. யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வானம்பார்த்த பயிராகவே உள்ளது. மழையை நம்பி ஒருபோகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். அங்கு சென்ற பலர் இப்போது நாட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும். வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்திலுள்ளது போன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால் அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறியிருக்கின்றோம்.

விவசாயமும், கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாரத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப் பொருட்களை பெறுமதிசேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும் என்றார்.

# பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 102 பேருக்கு சட்ட நடவடிக்கை

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 102 பேருக்கு எதிராக ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இராணுவமும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதலில் ஞாயிற்றுக்கிழமை (12) இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் பொலிஸ் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஹற்றன், வட்டவல, கினிகத்தேன, பொல்பிட்டிய, நோர்டன் பிரிட்ஜ், நல்லதண்ணி, மஸ்கெலியா, நோர்வூட் மற்றும் பொகவந்தலாவ பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகள், இராணுவத்தினருடன் இணைந்து ஞாயிற்றுக்கிழமை (12) இரவு 7 மணி முதல் 10 மணி வரை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸ் பிரிவு மோப்ப நாய் பிரிவின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் போது, போக்குவரத்து விதிகளை மீறிய 67 பேர், மதுபோதையில் வாகனம் ஓட்டிய 02 பேர், சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் மதுபானம் பயன்படுத்திய 13 பேர் மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளாத 20 பேர் உட்பட ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் மற்றும் பொலிஸ் சிறப்பு நடவடிக்கை கைப்படையினரை உள்ளடக்கிய இத்தகைய நடவடிக்கைகள் தொடர்ந்து மேற் கொள்ளப்படும் என்று பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

# கொடபொல பிரதேச செயலக புதிய செயலாளர் பொறுப்பேற்பு



(வெலிகம நிருபர்)

மாத்தறை மாவட்ட கொடபொல பிரதேச செயலக புதிய செயலாளராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1ஐச் சேர்ந்த கருண ஜீவலந்தே நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

2012ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட இவர், அம்பாறை பிரதேச செயலக உதவிச் செயலாளராகவும், மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளராகவும், தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்கள பிரதி பணிப்பாளராகவும், கடமை புரிந்துள்ளார். மாரம்பை கனிஷ்ட வித்தியாலயம் மாத்தறை ராகுல மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தில் பட்டம் பெற்று வெளியானவர் ஆவார்.

# பதுளை ரயிலில் மோதி ஒருவர் பலி

கண்டியிலிருந்து பதுளை நோக்கி பயணித்த விசேட விரைவு ரயிலில் மோதியதில், நேற்று முன்தினம் (13) இரவு பாடசாலைக் காவலாளி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை ஊவா கல்லூரியில் காவலராகப் பணியாற்றிய பதுளை, தெய்யன்னவெல பகுதியைச் சேர்ந்த மொஹமட் மசாஹிர் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை அமுனுவெல்பிட்டிய பகுதியில் உள்ள ரயில் நிலையத்திற்கு அருகில் அவர் பயணித்துக் கொண்டிருந்தபோது, கண்டியில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற சிறப்பு ரயிலில் மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கலைப்பீட 90 - 91 பட்டதாரிகளின் ஒன்று கூடல் நிகழ்வு



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 1990/1991 ஆண்டுகளில் கலைப்பீட பொதுக்கலை மற்றும் சிறப்புக்கலை பட்டம் பெற்ற பட்டதாரிகளது ஒன்று கூடல் நிகழ்வு 13ஆம் திகதி திங்கள் கிழமை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வருடங்களில் பட்டம் பெற்ற அணியில் இருந்து வெளியேறியவர்களில் காலம் சென்ற 17 பேர்கள் மற்றும் பேராசிரியர்களான அம்பலவானர் சிவராசா, அஷ்ஷெய்க் மௌலவி இப்ராஹீம் ஆகியோர்களுக்கான துஆப் பிரார்த்தனை அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

கலந்து கொண்ட பட்டதாரிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

# மாணிக்கவாசகர் திருவூர்தி பஜனை



(ரகுபரன்)

யாழ். சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலய மாணிக்கவாசகர் திருவூர்தி பஜனை நேற்று முன்தினம் நடைபெற்றது.

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் அதிகாலை 3 மணிக்கு ஆலய முன்றலில் இருந்து புறப்பட்ட மாணிக்கவாசகர் திருவூர்தியானது வலி மேற்கிலுள்ள ஆலயங்களை தரிசித்து காலை 7 மணியளவில் மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது.

மாணிக்கவாசகர் திருவூர்தி பஜனை நிகழ்வில் சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பெரியோர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் ஸ்ரீ சந்திரானந்த குருக்கள் தலைமையில் தைபொங்கல் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன. விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொது மக்களும் இவ்வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

படங்கள் க.கிஷாந்தன்

# ஈழத்துப் பதிப்புத் துறையின் முன்னோடி டேவிட் லிகோரி காலமானார்

ஈழத்துப் பதிப்புத் துறைக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிய டேவிட் லிகோரி உடல்நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் காலமானார்.



பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு அச்சுப் பொருள் களுக்குத் தட்டுப்பாடு நிலவிய 1990களில் மீரா வெளியீடாக 28 நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். கோடிட்ட அப்பியாசப் புத்தக தாள்களில் அச்சிடப்பட்டு, மர புளொக்கில் பதிக்கப்பட்ட அட்டையுடன் இந்நூல்களை அவர் பதிப்பித்து சைக்கிளில் சென்று விநியோகித்து வந்துள்ளார். போர்க்கால வாழ்வியலைப் பிரதிபலிக்கும் நாவல்களை தனது சொந்தச் செலவில் பதிப்பித்த வகையில் இவரது பணி முக்கியத்துவம் வாய்ந்தது.

செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம்,தாமரைச் செல்வி, கே.எஸ்.ஆனந்தன், இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன், கே.ஆர். டேவிட், இயல்வாணன், பொன். கணேசமூர்த்தி, வளவை வளவன், ஒ.கே.குணநாதன், வாமதேவன், முருகு, இந்திராபிரியதர்சினி முதலியோரின் சமகால நாவல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

பொருளாதார பலமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் அவர் சமூக அக்கறையுடன் செய்த சேவை முக்கியமானது.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டில் 37 பேர் காயம்



பெரும் எதிர்பார்ப்புகளுடன் அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நடந்து வருகிறது. இதுவரை நடந்த 8 சுற்றுகளில் 37 பேர் காயம் அடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆண்டுதோறும் மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்தப்படும். அதன்படி இந்த ஆண்டு (ஜன.14) அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு போட்டி அறிவித்தபடி நேற்று ஆரம்பித்தது.

போட்டியில் கலந்து கொள்ளும் காளைகளுக்கு உரிய முறையில் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. காளைகள் ஏற்கனவே பெற்றிருந்த பதிவு எண்ணின்படி வரிசையாக மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. காளையின் உடல்நிலை எப்படி உள்ளது, அதன் வயது, ஊக்க மருந்து ஏதேனும் பயன்படுத்தப்பட்டுள்ளதா, கொம்பின் அளவு என்ன என அனைத்தும் சரிபார்க்கப்பட்ட பின்னரே களத்தில் இறக்கிவிடப்பட்டன. பின்னர், மாவட்ட கலெக்டர் முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர். அமைச்சர் மூர்த்தி கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார். வாடிவாசலில் இருந்து சீறிபாய்ந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் அடக்கி வருகின்றனர்.

8 சுற்றுகள் முடிவில், மாடுபிடி வீரர்கள் 8 பேர் மற்றும் காளை உரிமையாளர்கள் 7 பேர் உட்பட 37 பேர் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்த டேவிட் வில்சன் என்பவர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஜல்லிக்கட்டை முன்னிட்டு கிட்டத்தட்ட 2000 பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வாடிவாசலில் இருந்து 1,100 காளைகள் ஒன்றன் பின் ஒன்றாக அவிழ்த்து விடப்பட்டதுடன் காளைகளை அடக்க 900 மாடுபிடி வீரர்கள் பெயர்களை முன்பதிவு செய்திருந்தனர். ஒவ்வொரு மணி நேரத்துக்கும் என 100 காளைகள் களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மகா கும்பமேளா: முதல் நாளில் 1 கோடி பக்தர்கள் புனித நீராடினர்

மகா கும்பமேளாவின் முதல் நாளில் 1 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர். சுமார் 40 கோடிக்கும் அதிகமானோர் கும்பமேளாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்துக்கள் புனிதமாக கருதும் விழாக்களில் மகா கும்பமேளாவும் ஒன்று. அதிகமான மக்கள் கூடும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவாகவும் இது பார்க்கப்படுகிறது. இந்த கும்பமேளா நிகழ்வுகள் பிரயாக்ராஜ், ஹரித்துவார், உஜ்ஜைனி, நாசிக் ஆகிய இடங்களில் நடைபெற்றாலும் கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் அமைந்துள்ள உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் நடைபெறுவது மிகவும் பிரசித்தி பெற்றது.

மகா கும்பமேளா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்ச்சி என்றாலும் இந்த ஆண்டு நடைபெறுவது 144 ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் நிகழ்வு என்பது இந்த கும்பமேளாவுக்கு கூடுதல் சிறப்பு. மகா கும்பமேளாவுக்கான ஏற்பாடுகள் கடந்த ஆண்டே ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு பிறந்தது முதலே உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சாதுக்கள், துறவிகள், ஆன்மிக பெரியவர்கள், வெளிநாட்டினர் மற்றும் பக்தர்கள் இலட்சக்கணக்கில் பிரயாக்ராஜ் நோக்கி செல்ல ஆரம்பித்தனர்.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 83 இலட்சம் பேர் கங்கை நதியில் புனித நீராடினர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கும்பமேளாவையொட்டி பிரயாக்ராஜ் முழுவதும் தோரணங்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் தங்குவதற்காக 10 ஆயிரம் குடில்களை கொண்ட தற்காலிக நகரம் அமைக்கப்பட்டுள்ளது. திரிவேணி சங்கமம் பகுதி இரவு நேரத்திலும்







பகலைப்போல் ஒளி வெள்ளத்தில் மிதக்கிறது.

புகழ் பெற்ற மகா கும்பமேளா, பவுஷிய பூர்ணிமா தினமான திங்கட்கிழமை(13) பஜனை மற்றும் பக்திக்கோஷங்களுக்கு இடையே கோலாகலமாக ஆரம்பித்தது. சாதுக்களையும், துறவிகளையும் தொடர்ந்து இலட்சக்கணக்கானோர் கங்கை நதியை நோக்கி ஜெய் கங்கா மாதா என்று கோஷமிட்டபடியே நடந்து சென்றனர். அடுத்த மாதம் (பெப்ரவரி) 26ஆம் திகதி வரை 45 நாட்கள் நடைபெறும் மகா கும்பமேளாவின் முதல் நாளான திங்கட்கிழமை(13) 1 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர் என அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

புனித நீராடிய பலர், ஆங்காங்கே அமர்ந்து இருந்த துறவிகளிடம் ஆசி பெற்றனர். ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, இத்தாலி உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பக்தர்களும் அதிக அளவில் கலந்து கொண்டனர். சுமார் கும்பமேளா நடைபெறும் பகுதியில், பூஜைப் பொருட்களை விற்று பக்தர்களுக்கு திலகம் பூசுபவர்கள் மிகவும் பரபரப்பாக இருந்ததுடன் அவர்களிடம் ஏராளமானோர் காத்திருந்து திலகமிட்டதை காண முடிந்தது.




# டில்லி முதலமைச்சர் மீது வழக்குப் பதிவு

டில்லி முதல்வர் அதிஷி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாதிரி தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதற்காக பொதுப்பணித் துறை அதிகாரி மீது டில்லி பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். ஜனவரி 7 ஆம் திகதி அரசு வாகனத்தை அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாக முதல்வர் அதிஷிக்கு எதிராக தேர்தல் நடத்தும் அதிகாரி முதலில் புகார் அளித்தார். விசாரணையைத் தொடர்ந்து, தேர்தல் பிரசாரத்திற்கு அரசு வாகனத்தைப் பயன்படுத்தியதாக டில்லி முதல்வர் மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரி ஆகியோர் இதுதொடர்பாக கோவிந்த்புரி பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்ததுடன் பொலிஸ் உதவி ஆணையர் கல்காஜியிடம் புகார் கடிதம் அளித்தனர்.

முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவலின்படி, "மாதிரி தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாகவும், அரசியல் நோக்கங்களுக்காக அரசு வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளார். தேர்தலின் போது பிரசாரம் தொடர்பான பயணங்களுக்கு அரசு வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# திருப்பதி லட்டு விநியோக மையத்தில் தீ விபத்து



திருப்பதி கோவில் வளாகத்தில் செயல்பட்டு வந்த லட்டு விநியோக மையத்தில் திடீர் தீ விபத்தினால் பரபரப்பு ஏற்பட்டது. தீ விபத்தைத் தொடர்ந்து அதனை கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வைகுண்ட துவார தரிசனத்தின் பத்தாவது நாளான திங்கட்கிழமை மாலை லட்டு விநியோகம் செய்யும் இடத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது அதுமட்டுமன்றி முன்னதாக ஜனவரி 8 ஆம் திகதி திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி ஆறு பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் சிக்கி 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சமீபத்திய கூட்ட நெரிசலை தொடர்ந்து திருப்பதியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது பேசு பொருளாகி இருக்கிறது.



# காஷ்மீரில் கண்ணிவெடித் தாக்குதல்: 6 படையினர் காயம்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கண்ணிவெடித் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அம்மாநிலத்தின் ரஜெளரி மாவட்டத்தில் நேற்று (14) வழக்கமான ரோந்து பணிகளில் இந்திய பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டிருந்தனர். அப்போது, காலை 10.45 மணியளவில் நவ்ஷெரா பகுதியிலுள்ள கம்பா கோட்டை அருகில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியின் மீது படைவீரர் ஒருவர் அறியாமல் மிதித்த காரணத்தால் தூண்டப்பட்டு குண்டு வெடித்ததில் பாதுகாப்புப் படை வீரர்கள் 6 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, அவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் அவர்கள் 6 பேரது உடல் நிலையும் தற்போது சீராக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, எல்லைக்கோட்டில் சட்டவிரோதமாக யாரேனும் உள்ளே வராமல் தடுப்பதற்காக கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும், மழைக்காலங்களில் அவை அங்கிருந்து மழை நீரில் அடித்துச் செல்லப்படுவதனால் இதுமாதிரியான விபத்துகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது

# மதுபானசாலை அமைக்க எதிர்ப்பு; திருப்பூரில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோவிலில் தனியார் மதுபானசாலை அமைக்க எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். வெள்ளக்கோவில் உப்புப்பாளையம் வீதியில் நகரின் மையப் பகுதியில் உள்ள ஒரு பழைய திருமண மண்டபத்தில் நவீன வசதிகளுடன் தனியார் மதுபானசாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதனருகே பாடசாலை, தபால் அலுவலகம், ஸ்ரீ வீரக்குமார சுவாமி கோயில், தர்ம சாஸ்தா ஐயப்ப சுவாமி கோயில் போன்றவை உள்ளன. சுற்றிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள், 50 இற்கும் அதிகமான கடைகள் காணப்படுகின்றன. எனவே, பல்வேறு தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைக்கவுள்ள மதுபான விற்பனை நிலையத்தினை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி மதுபானசாலை அமையவுள்ள கட்டடத்துக்கு முன்புற வீதியில் திரண்ட 150 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அரை மணி நேரம் எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர். தைப்பொங்கல் நாளில் ஆர்ப்பாட்டம் நடத்திய பொது மக்களால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.



உலக வலம் WORLD NEWS
பா. கிருஷிகா

## இஸ்ரேல் - காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் நிறைவு

# 33 பிணைக்கைதிகளை ஹமாஸ் விடுவிக்க தயார்



போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தம் "அடிப்படையில் உள்ளது" என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியதை அடுத்து, காஸாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இறுதி பேச்சுவார்த்தை செவ்வாய்க்கிழமையன்று டோஹாவில் நடைபெற்றது. பேச்சுவார்த்தை வெற்றியடைந்து இஸ்ரேல் - காஸா இடையில் போர் நிறுத்தம் ஏற்படும் எனவும், ஹமாஸ் 33 பணயக்கைதிகளை விடுதலை செய்ய தயாராக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஒப்பந்தமானது பணயக்கை திகளை விடுவிப்பது, போரை நிறுத்துவது, இஸ்ரேலுக்கு பாதுகாப்பை வழங்குவது மற்றும் ஹமாஸ் ஆரம்பித்த இந்தப் போரில் மோசமாக பாதிக்கப்பட்ட பலஸ்தீனியர்களுக்கு மனிதாபிமான உதவிகளை கணிசமாக அதிகரிக்க அனுமதிக்கும்" என ஜோ பைடன் திங்கட்கிழமையன்று ஒரு உரையில் குறிப்பிட்டார்.

ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 33 பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மேம்பட்ட நிலையில் இருப்பதாக இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இஸ்ரேலிய அதிகாரிகளின் கூற்றுப்படி, தொண்ணூற்றெட்டு பணயக்கைதிகள் காஸாவில் உள்ளனர்.

இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் கிடியோன் சார் செய்தியாளர்களிடம் "பேச்சு வார்த்தையில் முன்னேற்றம் முன்பை விட மிகவும் சிறப்பாக உள்ளதாகவும் பணயக்கைதிகள் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு அவர்கள் செய்யும் பெரும் முயற்சிகளுக்கு எங்கள் அமெரிக்க நண்பர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்" என்றார்.

ஹமாஸ் அதிகாரி ஒருவர் "சில முக்கிய பிரச்சனைகள் குறித்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, மீதமுள்ளவற்றை விரைவில் முடிக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

2023 ஒக்டோபரில் ஹமாஸ் போராளிகள் அவர்களின் எல்லைகளைத் தாண்டி 1,200 பேரைக் கொன்று 250 இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகளைப் பிடித்ததை அடுத்து, இஸ்ரேல் காஸாவில் தனது தாக்குதலை ஆரம்பித்தது. கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி நடத்திய தாக்குதலில் பணயக்கைதியாக பிடிக்கப்பட்டவர்களில் இன்னும் 94 பேர் ஹமாஸ் மற்றும் அதன் கூட்டாளிகள் வசம் உள்ளதாகவும் இதில் சுமார் 34 பேர் உயிரிழந்திருக்கலாம் என இஸ்ரேலால் நம்பப்படுகிறது. பலஸ்தீனிய சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, காஸாவில் 46,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப் பட்டுள்ளதுடன் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் "வருகின்ற 20 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவி ஏற்பதற்குள் போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவடையும் என நம்புகிறேன்" எனத் தெரிவித்திருந்தார்



## பிரேசிலில் நிலச்சரிவு: 10 பேர் உயிரிழப்பு



தென்கிழக்கு பிரேசிலில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் சிக்கி பத்து பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த சனிக்கிழமை இரவு, இபடிங்கா நகரில் ஒரு மணி நேரத்திற்குள் சுமார் 80 மில்லிமீட்டர் மழை பெய்தது. இதனால், அப்பகுதி முழுவதும் நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

நிலச்சரிவால் அழிக்கப்பட்ட வீட்டின் இடிபாடுகளுக்கு அடியில் எட்டு வயது சிறுவன் கண்டெடுக்கப்பட்டதுடன் அருகிலுள்ள நகரமான சாண்டானா டோ பரைசோவில் மற்றொரு உடலையும் மீட்புக் குழுவினர் மீட்டனர். இதுவரை நிலச்சரிவில் சிக்கி பத்து பேர் உயிரிழந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

நகரின் பெத்தானியா பகுதியில் உள்ள மலையின் ஓரத்தில் உள்ள ஒரு தெருவில் ஏற்பட்ட மற்றொரு நிலச்சரிவு அதன் பாதையில் இருந்த அனைத்தையும் அடித்துச் சென்றது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் காணாமல் போயிருந்தார். அவரின் நிலைமை குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை. இருப்பினும் அந்த நபரின் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் மீட்கப்பட்டனர்.

# நைஜீரியாவில் நாற்பது விவசாயிகள் கொலை

நைஜீரியாவின் வடகிழக்கு போர்னோ மாநிலத்தில் ஆயுதக் குழுக்களின் தாக்குதலில் குறைந்தது 40 விவசாயிகள் கொல்லப்பட்டதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்கா மாகாணத்தில் உள்ள போகோ ஹராம் குழு மற்றும் ஐஎஸ்ஐஎஸ் துணைப் பிரிவைச் சேர்ந்த போராளிகள் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என போர்னோ மாநில ஆளுநர் பாபகானா உமாரா ஜுலிம் மற்றும் மாநில தகவல் ஆணையர் உஸ்மான் தார் திங்கட்கிழமையன்று தெரிவித்தனர்.

ஆயுதக் குழுக்கள் சாட் ஏரியின் கரையில் தும்பாவில் பல விவசாயிகளை சுற்றி வளைத்து ஞாயிற்றுக்கிழமை பிற்பகுதியில் சுட்டுக் கொன்றதாக தார் தெரிவித்தார். ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கையின் படி சுமார் 40 விவசாயிகள் கொல்லப்பட்டதாக குறிப்பிடுகிறது, அதே நேரத்தில் தாக்குதலில் இருந்து பலர் தப்பித்துள்ளனர். பிராந்தியத்தில் கிளர்ச்சிப் போராளிகளுடன் போரிடும் வீரர்களுக்கு, தும்பா மற்றும் அவர்களின் பரந்த சாட் ஏரி பகுதியில் செயல்படும் "கிளர்ச்சிக் குழுக்களை கண்காணிக்கவும் அழிக்கவும்" மாநில அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.



ISWAP மற்றும் போகோ ஹராம் போராளிகளின் சரணாலயமாகவும், கண்ணிவெடிகள் நிறைந்ததாகவும், இரவு தாக்குதல்களுக்கு ஆளாகக்கூடியதாகவும் இருக்கும் பகுதியில், விவசாயம் மற்றும் மீன்பிடிக்க ஆயுதப் படைகளால் நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பான வரம்பை விவசாயிகள் தவறிவிட்டதாக தெரிவித்ததுடன் ஆயுதப்படையினரின் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். போராளிகள் மற்றும் வெடிமருந்துகள் அகற்றப்பட்ட, இராணுவத்தால் நியமிக்கப்பட்ட பாதுகாப்பான பகுதிகளுக்குள் இருக்குமாறு ஆளுநர் ஜுலம் பொதுமக்களை எச்சரித்தார்.

நைஜீரியா, நைஜர், கேமரூன் மற்றும் சாட் ஆகிய நாடுகளில் உள்ள சாட ஏரி, போகோ ஹராம் என்பன ISWAP இன் மறைவிடமாக செயல்படுகிறது, இது தாக்குதல்களை நடத்துவதற்கான தளமாக பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறான வன்முறைக்குழுக்களின் தாக்குதல்களால் வடகிழக்கு பிராந்தியத்தில் சுமார் 35,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

## பிலிப்பைன்ஸ் கடற் பிராந்தியத்தில் சீன கப்பல்

மணிலாவின் பிரத்தியேக கடல்சார் பொருளாதார பிராந்தியத்தில் (EEZ) சீனா தனது மிகப்பெரிய கடலோரக் கப்பலை நிறுத்துவது ஆபத்தானது மற்றும் தென்சீனக் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்களை அச்சுறுத்தும் நோக்கம் கொண்டது என பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் மலாயா செவ்வாய்க்கிழமையன்று, மணிலாவில் 165 மீட்டர் (541 அடி) நீளமுள்ள சீன கடலோர காவல்படை கப்பலான 5901, பிலிப்பைன்ஸ் கடல் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பை பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார், இது ஜாம்பலேஸ் மாகாணத்தின் கடற்கரையில் 77 கடல் மைல் (142 கிமீ) தொலைவில் காணப்பட்டது.

"அசுரக் கப்பலை நிலைநிறுத்துவதிலிருந்து சீன மக்கள் குடியசின் அதிகரித்து வரும் பிலிப்பைன்ஸ் மீதான ஆக்கிரமிப்பு குறித்து நாங்கள் ஆச்சரியப்பட்டோம், இது அதிகரிப்பு மற்றும் ஆத்திரமூட்டும் செயற்பாடு என்பதுடன் கப்பல் இருப்பது சட்டவிரோதமானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என மலாயா தெரிவித்தார். சீனக் கப்பலை விரட்ட தனது இரண்டு பெரிய கப்பல்களை அனுப்பியுள்ளதாக பிலிப்பைன்ஸ் கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.




பிலிப்பைன்ஸ் தேசிய கடல்சார் கவுன்சில் திங்கட்கிழமையன்று நாட்டின் பிராந்திய கடல் மற்றும் EEZ இற்குள் "சீன கடல் படைகள் மற்றும் போராளிகளின் சட்டவிரோத இருப்பு மற்றும் செயல்பாடுகளை" கண்டனம் செய்தது. பிலிப்பைன்ஸ் கடல் மண்டலத்தில் சீனாவின் இரண்டு கடலோர காவல்படை கப்பல்கள் மற்றும் ஒரு சீன கடற்படை ஹெலிகொப்டரையும் பிலிப்பைன்ஸ் கடலோர காவல்படை அடையாளம் கண்டுள்ளது. "இந்த சீன கப்பல்கள் மற்றும் விமானங்களின் விரிவாக்க நடவடிக்கைகள் பிலிப்பைன்ஸ் மற்றும் சர்வதேச சட்டங்களை தெளிவாக புறக்கணிக்கிறது" என பிலிப்பைன்ஸ் கவுன்சில் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## ஷேக் ஹசீனா குடும்பத்திற்கு எதிராக பங்களாதேஷ் வழக்குப் பதிவு

பதவி நீக்கம் செய்யப்பட்ட ஷேக் ஹசீனா, அவரது குடும்பத்தினர் மீது பங்களாதேஷ் ஊழல் தடுப்பு ஆணையம் வழக்குப் பதிவு செய்துள்ளது. இதில் பிரிட்டன் அமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மூத்த அதிகாரி ஒருவரும் இடம்பெற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் அதிக மக்கள் தொகை கொண்ட பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் புறநகர் பகுதியில் பெரிய அளவிலான இலாபகரமான நில அபகரிப்புடன் தொடர்புடையவை.

"ஷேக் ஹசீனா, சில அதிகாரிகளுடன் இணைந்து, தனக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கும் நிலங்களை ஒதுக்கிக் கொண்டார். ஏ.சி.சி. விசாரணைக் குழு தேவையான ஆவணங்களைப் பெற்று, வழக்குகளைத் தாக்கல் செய்ய போதுமான ஆதாரங்களைக் கண்டறிந்துள்ளது" என ஊழல் தடுப்பு ஆணையத்தின் (ஏ.சி.சி.) இயக்குநர் ஜெனரல் அக்தர் ஹுசைன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இது



தொடர்பான வழக்குகளில் ஷேக் ஹசீனாவின் மருமகள், பிரித்தானிய அமைச்சர் துலிப் சித்திக் ஆகியோரும் இடம்பெற்றுள்ளதாக ஹுசைன் தெரிவித்துள்ளார். உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய தலைவர் ஷேக் ஹசினாவின் மகள் சைமா வாசெட்டும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

Sports விளையாட்டு
oruvansports@gmail.com
எஸ்.ஸ்ரீகாந்த்

# சூப்பர் கப் உதைப்பந்தாட்டம்
# பார்சிலோனா சம்பியன்



சூப்பர் கிண்ணம் உதைப்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பார்சிலோனா – ரியல் மாட்ரிட் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அடுத்தடுத்து கோல்கள் அடித்து அசத்தியது. ரியல் மாட்ரிட் முதல் கோல் அடித்து முன்னிலை பெற்ற போதிலும் அந்த அணியால் அடுத்தடுத்து கோல்கள் அடிக்க முடியவில்லை.

முடிவில் 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற பார்சிலோனா கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த தொடரில் பார்சிலோனா கிண்ணத்தை வெல்வது இது 15ஆவது முறையாகும்.

பார்சிலோனா அணியில் ராபின்ஹூா 2 கோல்களும், லாமினே யாமல், ராபர்ட் லெவான்டாவ்ஸ்கி மற்றும் அலெஜான்ட்ரோ பால்ட் ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்து அணி வெற்றிப் பெற உதவினர். ரியல் மாட்ரிட் அணியில் எம்பாப்வே மற்றும் ரோட்ரிகோ மட்டுமே தலா ஒரு கோல் அடித்தனர்.

## இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு திறமைக்கேற்பவே ஊதியம்
### பிசிசிஐ அறிவிப்பு






இந்திய கிரிக்கெட் அணியின் வீரர்களுக்கு இனி திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்திய அணியின் வீரர்கள் விளையாடும் அனைத்துப் போட்டித் தொடர்களுக்கும் அவர்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் சம்பள விகிதம் வழங்கப்படும். ஏனெனில் பி.சி.சி.ஐ வீரர்களுக்கு தகுதிக்கேற்ப வருடாந்த ஒப்பந்த பட்டியலின் படி சம்பளத்தை வழங்கி வருவதால் வீரர்கள் மெத்தனமாக இருப்பதாகவும், அதனைத் தடுக்க இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதன் காரணமாக ஒவ்வொரு தொடரிலும் அவர்கள் சிறப்பாக செயல்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த முடிவினை எடுத்ததாக அறிவித்துள்ளது.

இதன் காரணமாக இனிவரும் தொடர்களை இந்திய வீரர்கள் முக்கிய தொடர்களாக எடுத்து கவனமாக விளையாடுவார்கள் என்பதனாலே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அண்மையில் மும்பையில் நடந்த பிசிசிஐ கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் கெப்டன் ரோகித் சர்மா, பயிற்சியாளர் காம்பீர், தேர்வுக்குழு தலைவர் அஜித் அகார்கர் மற்றும் பிசிசிஐ முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் இந்திய அணியின் எதிர்காலம் குறித்த பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

மேலும் ரோகித் சர்மாவிற்கு அடுத்து இந்திய அணியின் எதிர்கால கெப்டன் குறித்த பேச்சு வார்த்தையும், சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான முக்கிய முடிவுகள் குறித்தும் பல்வேறு விடயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன.

இந்திய கிரிக்கெட் நிர்வாகமான பிசிசிஐயின் உரிய அனுமதியின்றி வீரர்கள் தங்களது குடும்பத்தாருடனோ, உறவினர்களுடனோ எவ்வித தொடர்களுக்கும் பயணிக்கக் கூடாது என்ற முடிவையும் எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான தோல்விக்குப் பிறகு இனிவரும் எந்த ஒரு தொடரையும் இந்திய வீரர்கள் எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

## ரின்கோ ரி20 லீக் 2025
## (TRINCO T20 LEAGUE)




**ஏ.எச்.ஹஸ்பர்**

ரின்கோ ரி20 லீக் 2025ன் மூன்றாவது பருவம் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்த பருவத்தில் 12 அணிகள் பங்கேற்கின்றன. இப் போட்டிகள் ஜனவரி 18, 19, 24, 25 மற்றும் பெப்ரவரி 01, 02 ஆகிய திகதி வரை திருக்கோணமலை ஹசர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ரின்கோ சூப்பர் 40 கிரிக்கெட் கிளப் இந்த போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. இந்த லீக், கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒரு சிறந்த அனுபவத்தை வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ரி20 லீக், கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமல்லாமல், இளம் வீரர்களுக்கும் ஒரு அரிய வாய்ப்பாக அமையும்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான BOCCயை சம்பியன்ஷிப்



இலங்கையின் முதல் விளையாட்டு வலைத்தளமான Srilankasports.com தேசிய மாற்றுத்திறனாளி பெண்கள் கூட்டமைப்புடன் இணைந்து, மாற்றுத்திறனாளி குழந்தைகளை உள்ளடக்கிய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Boccயை சம்பியன்ஷிப் போட்டியை 19 ஆம் திகதி பண்டாரகம விளையாட்டு வளாகத்தில் நடத்தவுள்ளது.

இந்தப் புதிய Boccயை விளையாட்டைப் பற்றிய சிறப்புப் பயிற்சி முகாம் அண்மையில் நடத்தப்பட்டது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் தென் அமெரிக்காவில் வேகமாக பிரபலமடைந்து வரும் இந்த விளையாட்டை இலங்கையிலும் விரிவுபடுத்துவதே இதன் நோக்கமாகும். 20, 18 வயது மற்றும் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான போட்டிகளுடன், BOCCயை சம்பியன்ஷிப்பில் சுமார் 50 விளையாட்டு வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.



## அமெரிக்காவின் மேடிசன் கீஸ் 2ஆவது சுற்றுக்குத் தகுதி

'கிராண்ட்ஸ்லாம்' என்ற அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் மேடிசன் கீஸ், சக நாட்டவரான ஆன் லி உடன் மோதினார்.

இதில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய மேடிசன் கீஸ் 6-4 மற்றும் 7-5 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 2-வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

இவர் 2ஆவது சுற்றில் எலெனா-கேப்ரியெலா ரூஸ் உடன் விளையாட உள்ளார்.





## ஏஷஸ் மகளிர் கிரிக்கெட்
## அவுஸ்திரேலியா தொடரை வென்றது

அவுஸ்திரேலியா – இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே 3 போட்டிகள் கொண்ட ஏஷஸ் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டியில் 2-0 விகிதத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை தம்வசம் படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்து பந்துவீச்சில் தடுமாறியது. அந்த அணியில் முன்னணி வீராங்கனையான எல்லிஸ் பெர்ரி (60) தவிர மற்ற வீராங்கனைகள் யாரும் பெரிய அளவில் ஓட்டங்கள் எடுக்கவில்லை. இதனால் 44.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த அவுஸ்திரேலியா 180 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இங்கிலாந்து அணியில் சோபி எக்லெஸ்டோன் 4 விக்கெட்டுகளும், ஆலிஸ் கேப்ஸி 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 181 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணியும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது.நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களான நாட் ஸ்கைவர்-பிரண்ட் மற்றும் ஆமி ஜோன்ஸ் அணிக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் விளையாடினர். இருப்பினும் அவர்கள் ஆட்டமிழந்ததும் இங்கிலாந்து அணியின் வெற்றி வாய்ப்பு பறிபோனது.

48.1 ஓவர்கள் விளையாடிய இங்கிலாந்து 159 ஓட்டங்களில் வெளியேறியது. அவுஸ்திரேலியா 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 15ஆம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.